தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

24.12.2012 A.M

## மர்ம நோயால் மாடுகள் சாவு : கால்நடைத் துறை அதிகாரிகள் ஆய்வு

உளுந்தூர்பேட்டை அருகே பின்னல்வாடி, பழங்குணம் ஆகிய கிராமங்களில் மர்ம நோயால் பாதிக்கப்பட்ட மற்றும் உயிரிழந்த மாடுகளை கால்நடைத்துறை இயக்குநர்கள், மருத்துவர்கள் ஞாயிற்றுக்கிழமை ஆய்வு செய்தனர்.

÷பின்னல்வாடி, பழங்குணம் ஆகிய கிராமங்களில் மர்ம நோயால் 50-க்கும் மேற்பட்ட மாடுகள் இறந்து விட்டதாகவும், மாடுகளுக்கு பரவிய நோயைக் கண்டறிந்து அதற்கு உரிய சிகிச்சை அளிக்க வேண்டும்.

÷உயிரிந்த மாடுகளின் உரிமையாளர்களுக்கு அரசு நிவாரணத் தொகை வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி எலவனாசூர்கோட்டை அரசு கால்நடை மருத்துவமனை முன் திங்கள்கிழமை விவசாயிகளைத் திரட்டி முற்றுகைப் போராட்டம் நடத்தப் போவதாக அந்த கிராமத்தைச் சேர்ந்த அவார்டு கல்வி அறக்கட்டளை இயக்குநரும், சமூக ஆர்வலருமான பி.துரை அறிவித்திருந்தார்.

÷இந்நிலையில் விழுப்புரம் மாவட்ட கால்நடைத் துறை உதவி இயக்குநர் மகேந்திரன், திருக்கோவிலூர் கால்நடைத்துறை உதவி இயக்குநர் குபேந்திரன், மருத்துவர்கள் சந்திரன், இளவரசு ஆகியோர் பின்னல்வாடி, பழங்குணம் கிராமங்களில் முகாமிட்டு மர்ம நோயால் பாதிக்கப்பட்ட மற்றும் உயிரிந்த மாடுகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

÷பழங்குணம் கிராமத்தில் வீரன் என்பவரின் மாடு மர்ம நோயால் பாதிக்கப்பட்டு இறந்தது. புதைக்கப்பட்ட மாட்டின் உடலைத் தோண்டி எடுத்து உதவி இயக்குநர்கள் முன்னிலையில் மருத்துவர்கள் ஆய்வு செய்தனர்.

÷ஆய்வில் சப்பை நோயால் மாடு பாதிக்கப்பட்டு உயிரிழந்தது தெரிய வந்தது. அதனையடுத்து மேற்கண்ட இரு கிராமங்களில் வரும் 26-ஆம் தேதி கால்நடைகள் குறித்து பொது விழிப்புணர்வு

முகாம் நடத்துவது, அந்நாளில் விடுபட்டுள்ள மாடுகளுக்கு சப்பை நோய் வராமல் தடுப்பூசி போடுதல்,

÷கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்கள் குறித்தும், அதனை வராமல் எவ்வாறு தடுப்பது குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல், விவசாயிகளின் கோரிக்கையினை அரசிடம் எடுத்துரைத்து உயிரிழந்த மாடுகளுக்கு நிவாரணம் வழங்க ஏற்பாடு செய்வதாகவும் உறுதியளித்தனர்.

÷அதன் பேரில் திங்கள்கிழமை நடைபெறுவதாக இருந்த முற்றுகைப் போராட்டம் கைவிடப்பட்டது.

**"காவிரி நீர் பிரச்னையில் டெல்டா விவசாயிகளுக்கு கருணா நிதி துரோகம் '**

காவிரி நதி நீர் பிரச்னையில், இறுதி தீர்ப்பை அரசிதழில் வெளியிட நடவடிக்கை எடுக்காமல், டெல்டா விவசாயிகளுக்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி துரோகம் செய்து விட்டதாக ஊரகத் தொழில் துறை அமைச்சர் பா. மோகன் பேசினார்.

விழுப்புரத்தில் மாவட்ட அ.தி.மு.க. விவசாயப் பிரிவு நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மற்றும் கருத்தரங்கம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. ஊரகத் தொழில் துறை அமைச்சர் பா. மோகன் பேசியது:

தமிழக்தில் அ.தி.மு.க. ஆட்சியின் போது விவசாயிகளுக்கு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி, நேசக்கரம் நீட்டி வருகிறது. மின் கட்டணத்தை 50 பைசாவாக குறைக்க வலியுறுத்தி விவசாயிகள் போராட்டம் செய்த போது துப்பாக்கி சூடு நடத்தினார் கருணாநிதி.

சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையத்தில் போராட்டத்தில் இறந்த விவசாயிகளுக்கான நினைவுத் தூண் உள்ளது. இது விவசாயிகளுக்கு கருணாநிதி செய்த துரோகத்தை எடுத்துக் காட்டுகிறது.

எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்த போது, போராட்டம் நடத்திய விவசாயிகளின் சங்க நிர்வாகிகளின் வீட்டுக்கே சென்று பேசி பிரச்னையை தீர்த்து வைத்தார். ÷முந்தைய அ.தி.மு.க. ஆட்சியில் டெல்டாவில் 17.5 லட்சம் ஏக்கர் சாகுபடி செய்யப்பட்டது. ஆனால் கடந்த ஆட்சியில் அது 12.5 லட்சமாக குறைந்து விட்டது.

காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை அரசாணையில் வெளியிட அவர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. தற்போது முதல்வர் ஜெயலலித் இறுதித் தீர்ப்பை அரசிதழில் வெளியிட வேண்டும் என வலியுறுத்தி வருகிறார் என்றார் அமைச்சர்.

விவசாயப் பிரிவு மாவட்டச் செயலாளர் இ.தணிகாசலம் தலைமை வகித்தார். மாநில துணைச் செயலாளர் எம்.சுப்பையன், மாநில இணைச் செயலாளர் கே. கர்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட விவசாயப் பிரிவு தலைவர் சண்முகன் வரவேற்றார். விழுப்புரம் நகர்மன்றத் தலைவர் ஜி.பாஸ்கரன் தொடக்கி வைத்தார். இதில், விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர் ரா. லட்சுமணன், சட்டப்பேரவை உறுப்பினர் சி.வி. சண்முகம் உள்ளிட்டோர் பங்கேற்றனர். காணை ஒன்றிய விவசாயப் பிரிவு செயலாளர் வி.குப்புசாமி நன்றி கூறினார்.

**நேரடி மானியம் பெற ஆதார் அட்டை எண்ணுடன்**

புதுச்சேரியில், மத்திய அரசின் திட்டங்களின் பணப் பயன்களை நேரடியாகப் பெற, ஆதார் அட்டை எண்ணுடன் பயனாளிகளின் வங்கிக் கணக்கு எண்ணையும் இணைக்க வேண்டியுள்ளது என்று அரசு அதிகாரிகள் தெரிவித்தனர்.

÷இதுதொடர்பாக, மத்திய அரசின் சுகாதாரத்துறை இணைச் செயலர் விஷ்வாஸ் மேத்தா, புதுச்சேரி அரசு செயலர்கள் ராகேஷ்சந்திரா, ராஜீவ்யதுவன்ஷி, ஆட்சியர் சு.பா.தீபக்குமார் ஆகியோர் கூட்டாக சனிக்கிழமை செய்தியாளர்களிடம் கூறியது:

÷புதுச்சேரி மாவட்டத்தில், ஆதார் அடையாள அட்டை பெறத் தகுதியான 9.46 லட்சம் பேரில், 8.18 லட்சம் பேருக்கு புகைப்படம் எடுக்கப்பட்டது.÷இவர்களில் 7.35 லட்சம் பேருக்கான அட்டைகள் தயார் செய்யப்பட்டு, அஞ்சல் துறை மூலம் அளிக்கப்பட்டன. 7.25 லட்சம் அட்டைகள் மக்களிடம் வழங்கப்பட்டது. 3,131 அட்டைகள் உரிய முகவரியில் பயனாளிகள் இல்லாமல் திரும்பியிருக்கிறது.

÷மத்திய அரசின் திட்டமான, "உங்கள் பணம் உங்கள் கையில்' எனும் திட்டத்தின்படி, பயனாளிகளுக்கு நேரடியாக வங்கிக் கணக்குகளுக்குத் திட்ட மானியத்தையும், பணப் பயன்களையும் வரவு வைக்கும் திட்டத்தை 45 மாவட்டங்களில் முதல்கட்டமாக அறிமுகப்படுத்தத் திட்டமிடப்படுள்ளது. இத்திட்டம் முதலில் புதுச்சேரியில் தொடங்கப்பட உள்ளது. 34 மத்திய அரசு திட்டங்களில், 15 திட்டங்கள் அமல்படுத்தப்படும் மாநிலம் புதுச்சேரி.

÷மேலும், நாட்டிலேயே 90.6 விழுக்காடு ஆதார் அட்டைகள் வழங்கப்பட்டு, 3வது இடத்தைப் புதுச்சேரி பிடித்திருக்கிறது. மேலும், ஆதார் அட்டைகளோடு, வங்கிக் கணக்கு வைத்திருப்போர் எண்ணிக்கையும் அதிகம் கொண்ட மாவட்டம் புதுச்சேரி. மொத்த பயனாளிகள் 16,516 பேர். இவர்களில் வங்கிக் கணக்கு வைத்திருப்பவர்கள் 15,432 பேர். கணக்கு தொடங்காதவர்கள்,

விரைவில் வங்கிக் கணக்குத் தொடங்க வேண்டும். விரும்பிய எந்த வங்கிகளிலும் தொடங்கலாம். வறுமைக் கோட்டுக்குக் கீழ் வசிப்போர், குடும்ப அட்டையோடு சென்றால், குறைந்தபட்சத் தொகை இல்லாமல் பூஜிய கணக்கு தொடங்க முடியும்.

÷அதோடு, பயனாளிகளுக்கான நிதி பரிமாற்றத்துக்காக, ஆதார் அட்டை எண்ணையும், வங்கிக் கணக்கையும் இணைக்க வேண்டியிருக்கிறது. இப்பணியை வரும் டிசம்பர் மாதத்துக்குள் முடித்து, ஜனவரி முதல் இத்திட்டத்தை அமல்படுத்தத் திட்டமிட்டிருக்கிறோம். இப்பணிக்காக வங்கிக் கணக்கு எண்ணையும், ஆதார் எண்ணையும் மக்கள் அளிக்க வேண்டும்.

÷புதுச்சேரி மாவட்டமான புதுச்சேரி, யேனம், மாஹே பிராந்தியங்களில் 8 இடங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன. புதுச்சேரியில் இத்திட்டம் விரைந்து முடிக்கப்பட்டால், பிற மாநிலங்களுக்கு இது முன்னுதாரணமாக அமையும்.

வரும் 24-ம் தேதி புதுச்சேரி வரும் நிதியமைச்சர் ப.சிதம்பரம், இத்திட்டத்தை ஜனவரி மாதம் முதல் அமலுக்குக் கொண்டுவருவதற்கான முன்னேற்பாடுகள் குறித்து அரசு அதிகாரிகளோடு ஆலோசனை நடத்துகிறார் என்றனர்.

**இயற்கை வேளாண்மை பயிற்சி**

வடமதுரை பகுதி விவசாயிகளுக்கு, பழனி குதிரையாறு பகுதியில் இயற்கை வேளாண்மை குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது.

மத்திய அரசின் அட்மா திட்டத்தின் மூலம் நடைபெற்ற இப்பயிற்சியில் மகாராஜா இயற்கை வேளாண்மை மையத்தின் மேலாளர் ரெங்கராஜ், விவசாயிகளுக்கு இயற்கை வேளாண்மை குறித்து பயிற்சி அளித்தார். மேலும் அவர்களுக்கு மாற்று எரிசக்தி மின்சாரம் மூலம் விவசாயம் செய்வதற்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.

பழனி சின்னகலையம்புத்தூரில் உள்ள விதை சுத்திகரிப்பு நிலையத்தில் அவர்களுக்கு பழனி வேளாண்மை உதவி இயக்குநர் (பொறுப்பு) காளிமுத்து, விதை சுத்திகரிக்கும் பயிற்சி அளித்தார்.

இதற்கான ஏற்பாடுகளை வடமதுரை வேளாண்மை உதவி இயக்குநர் அ. ராணி, வட்டார வேளாண்மை அலுவலர் பாலகிருஷ்ணன், துணை அலுவலர் அ.கணேசன் உள்ளிட்டோர் செய்தனர்.

## திரட்சி யான , எடை அதிகமுள்ள கடலை பெற வேளாண் துறை யோசனை

நிலக்கடலை சாகுபடியின்போது பொக்குகளற்ற திரட்சியான எடை அதிகம் உள்ள நிலக்கடலை பெற ஜிப்சம் இடவேண்டும் என வேளாண் துணை இயக்குநர் ஆர்.அரிவாசகன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் சனிக்கிழமை கூறியது:

நிலக்கடலை சாகுபடியில் பூக்கள் விழுதுகளாக மாறி பூமியினுள் சென்று கடலைகளாக மாற்றம் பெறுகின்றன. இந்த விழுதுகள் பூமியில் இறங்கும்போது மண் பொல பொலப்பாக இருக்க வேண்டும்.

நிலக்கடலையில் பூக்கும் பருவம் 26-ம் நாளில் துவங்கி 45-ம் நாள் விழுதுகள் மண்ணில் இறங்க ஆரம்பிக்கும். அந்த காலகட்டத்தில் மண்ணை கிளறிவிட்டு ஜிப்சம் இட்டு மண் அணைப்பதால் விழுதுகள் எளிதில் மண்ணுக்குள் சென்று காய்கள் பிடிப்பதை அதிகப்படுத்தும்.

தற்போது கார்த்திகைப் பட்டத்தில் மானாவாரியில் செய்யப்பட்ட நிலக்கடலை சாகுபடியில் அடியுரமாக ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்சம் இடவேண்டும். அடியுரமாக இடாதபட்சத்தில் 160 கிலோ ஜிப்சத்தை 40 முதல் 70-ம் நாளுக்குள் செடிக்கு அருகில் இட்டு மண் அணைத்துக் கொடுக்கலாம்.

இதனால் பொக்குகளற்ற, திரட்சியான, எடை அதிகமுள்ள கடலை பெற முடியும். ஜிப்சமானது வேரின் வளர்ச்சியை அதிகப்படுத்தி, நீரை அதிகம் இழுத்து பயிருக்கு கிடைக்கச் செய்வதன் மூலம் அதிக மகசூல் பெறலாம் என அவர் கூறினார்.

## மிளகாய் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் சேர விவசாயிகளுக்கு ஆட்சியர் அழைப்பு

மிளகாய் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்ந்து பயன்பெறுமாறு ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகளுக்கு ஆட்சியர் க.நந்தகுமார் அழைப்பு விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் சனிக்கிழமை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

ராமநாதபுரம் மாவட்டத்தின் பிரதான பயிரான நெற்பயிருக்கு அடுத்த படியாக மிளகாய் பயிர் நேரடி விதைப்பின் மூலம் 17ஆயிரம் ஹெக்டேர் பரப்பிலும், நாற்றங்கால் முறையில் 3 ஆயிரம் ஹெக்டர் பரப்பளவிலும் பயிரிடப்பட்டு வருகிறது.

இப்பயிர் அக்டோபர், நவம்பர் மாதங்களில் விதைப்பு செய்யப்பட்டு மே மாதம் அறுவடையாகிறது.

இந் நிலையில் நடப்பாண்டில் மிளகாய் பயிரிடும் விவசாயிகளுக்கு வெள்ளம், மழை, புயல், கடும் வறட்சி, பூச்சி, நோய் தாக்குதலினால் ஏற்படும் பாதிப்புகளுக்கு இழப்பீடு வழங்கப்படும் விதமாக தேசிய வேளாண்மைக் காப்பீட்டு நிறுவனம் மூலம் பயிர் இன்சூரன்ஸ் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டம் ராமநாதபுரம் மாவட்டத்தில் திருவாடானை, மண்டபம் வட்டாரங்கள் நீங்கலாகப் பிற 9 வட்டாரங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் பயிர்க் கடன் பெற்ற விவசாயிகள் பிரீமியம் தொகை கடன் வழங்கும் நிறுவனம் மூலமாகப் பிடித்தம் செய்யப்படும்.

பயிர்க் கடன் பெறா விவசாயிகள் தங்களுடைய சுயவிருப்பத்தின்பேரில் பயிர்க் காப்பீடு செய்து கொள்ளலாம். இத்திட்டத்தின் கீழ் ஒரு ஏக்கர் மிளகாய் பயிருக்கு ரூ.5076 காப்பீடு செய்யப்படுகிறது. பிரீமியம் தொகை காப்பீட்டுத் தொகையில் 10.00 சதவிகிதம், அதாவது ரூபாய் 508 ஆகும்.

வணிக வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் பயிர்க்கடன் பெற்ற அனைத்து விவசாயிகளுக்கும் பிரீமியம் தொகையில் 50 சதவிகிதமும், பயிர்க்கடன் பெறாத சிறு, குறு விவசாயிகளுக்குப் பிரீமியம் தொகையில் 55 சதவிகிதமும், பயிர்க்கடன் பெறாத பெரிய விவசாயிகளுக்கு பிரீமியம் தொகையில் 50 சதவிகிதமும் மானியமாக மத்திய, மாநில அரசால் வழங்கப்படுகிறது.

பயிர்க்கடன் பெற்ற விவசாயிகள் ஒரு ஏக்கர் மிளகாய் பயிருக்கு ரூ.254-ம், பயிர்க்கடன் பெறாத சிறு, குறு விவசாயிகள் ரூ.228-ம் பிரீமியம் தொகையாக செலுத்தி இத்திட்டத்தில் சேரலாம். பயிர்க் கடன் பெறாத பெரிய விவசாயிகள் ரூ.254 பிரீமியம் செலுத்த வேண்டும். பிரீமியம் தொகையை தேசிய மயமாக்கப்பட்ட வணிக வங்கிகள், கிராமிய வங்கிகள், தங்கள் பகுதிகளில் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் செலுத்தலாம்.

இழப்பீட்டுத் தொகையானது உத்தரவாத மகசூலுக்கும், நடப்புப் பருவ மகசூல் குறைவிற்குமான வித்தியாசத்தின் விகிதாசார அடிப்படையில் கணக்கிடப்பட்டு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் விவசாயிகள் சேர கடைசி நாள் கடன் பெறா விவசாயிகளுக்கு 15.1.2013. கடன் பெற்ற விவசாயிகளுக்கு 31.3.2013.

மத்திய, மாநில அரசுகளால் இணைந்து செயல்படுத்தப்படும் இத்திட்டம் பற்றிய கூடுதல் விவரங்களைத் தெரிந்து கொள்ள விவசாயிகள் தங்கள் வட்டாரங்களில் உள்ள வேளாண் விரிவாக்க மையங்கள், வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர்கள், தோட்டக்கலை அலுவலர்கள், உதவி வேளாண் அலுவலர்கள் ஆகியோரை அணுகி தெரிந்து கொள்ளலாம் என ஆட்சியர் க.நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

## உரம் ஏற்றி வந்த வேனை சிறைப்பிடித்த விவசாயிகள்

கோபி அருகே கள்ளிப்பட்டி பகுதியில் உரங்கள் ஏற்றி வந்த வேனை அப்பகுதி விவசாயிகள் சிறைப்பிடித்தனர்.

÷கோபி, கள்ளிப்பட்டி அருகே சைபன்புதூர் பகுதியில் பவானியைச் சேர்ந்த ஒருவர் வேப்பம் புண்ணாக்கு விற்பனை செய்து வந்தார். இவர் கடந்த சில நாட்களுக்கு முன்பு தன்னிடம் வாங்கிய கடனை பவானியில் உரக்கம்பெனி நடத்தி வருபவர் திருப்பி தராததால், அவரிடம் பணத்திற்கு பதிலாக உரமூட்டைகளை வாங்கி வைத்துள்ளதாக விவசாயிகளிடம் கூறினாராம்.

÷இந்நிலையில், பவானியைச் சேர்ந்த நபர் ஒருவர் வேனில் 25 உர மூட்டைகளை ஏற்றிக் கொண்டு சைபன்புதூருக்கு சனிக்கிழமை வந்துள்ளார். அப்போது அப்பகுதி விவசாயிகள் வேனை நிறுத்தி, உர மூட்டைகள் போலியானதாக இருக்கும் எனக் கருதி சிறைப்பிடித்தனர். அப்போது வேனிலிருந்த டிரைவர் மற்றும் 2 பேர் தப்பி ஓடிவிட்டனர்.

÷இது குறித்து ஈரோடு உரக்கட்டுப்பாடு அதிகாரிகளுக்கு தகவல் கொடுக்கப்பட்டது. அவர்கள் வந்து உரத்தை பரிசோதனைக்காக எடுத்துச் சென்றுள்ளனர்.

போலி உரமா என தெரிந்த பின்பு நடவடிக்கை எடுக்கப்படும் என்றனர்.

## மானியத்துடன் விதை , இடுபொருள்கள்

மானியத்துடன் கூடிய விதை மற்றும் இடுபொருள்கள் பெற வெம்பாக்கம் வட்டாரத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து வெம்பாக்கம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் தா.பாண்டியன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

விவசாயிகள் புதிய தொழில்நுட்பங்களை கடைப்பிடித்து, அனைத்து பயிர்களிலும் அதிக மகசூல் பெற வேளாண் துறை மூலமாக தமிழக அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

மேலும் மானியத் திட்டங்களாக, திருந்திய நெல் சாகுபடிக்கு ஹெக்டேருக்கு ரூ. 3000, பயறு வகை பயிர்களுக்கு டி.ஏ.பி. கரைசல் இரண்டு முறை தெளிக்க ஹெக்டேருக்கு ரூ. 500, மணிலா, உளுந்து விதைகளுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.12, தெளிப்புநீர் பாசனம் பி.வி.சி. குழாய்கள் அமைப்பதற்கு 50 சதவீதம் மானியமாக வழங்கப்படுகிறது.

கரும்பு பயிருக்கு சொட்டுநீர்ப் பாசனம் அமைப்பதற்கு ஒரு ஏக்கருக்கு 100 சதவீதமும், மண்புழு உரத் தொட்டி அமைக்க 50 சதவீதமும், சான்றுபெற்ற நெல் விதைகளுக்கு கிலோவுக்கு ரூ.5 வீதமும், கைத்தெளிப்பான் மற்றும் விசைத் தெளிப்பான் பெறுவதற்கு 50 சதவீதமும் மானியமாக வழங்கப்படுகிறது.

உயிர் பூச்சிக்கொல்லி மருந்துகள், நுண்ணுயிர் பாக்கெட்டுகள் 50 சதவீத மானியத்திலும், நிலவள நீர்வள திட்டத்தில் செயல்விளக்கங்கள் அமைப்பதற்கும் மானியம் வழங்கப்படுகிறது.

வெம்பாக்கம் வட்டாரத்தைச் சேர்ந்த விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள உதவி வேளாண்மை அலுவலரின் பரிந்துரை பெற்று இப் பயன்களைப் பெறலாம்.

### கரும்பு பருக்களிலிருந்து நாற்றுகள் உற்பத்தி

கிருஷ்ணகிரி அருகே செம்மை சாகுபடி முறையில் கரும்பு பருக்களிலிருந்து நாற்றுகள் தயார் செய்யும் பண்ணை தொடங்கப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி அருகே உள்ள தின்னகழனி கிராமத்தில் கன்னியப்பன் என்ற விவசாயி நிழல்வலைக் கூடம் அமைத்து கரும்பில் இருந்து பருக்களை தனியாக பிரித்து, அதிலிருந்து கரும்பு நாற்றுகளை தயார் செய்து வருகிறார்.

இதன் தொடக்க விழா தருமபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலையின் தனி அலுவலர் முருகவேல் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதில் அவர் பேசியது: கரும்பில் இருந்து பருக்கள் மட்டும் தனியாக பிரித்து எடுத்து நாற்றுகள் தயார் செய்யப்பட்டு வருகிறது. மீதம் உள்ள கரும்பு ஆலைக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. இந்த வகை நாற்றுகள் ஒரு ஏக்கருக்கு 5 ஆயிரம் போதுமானது.

சொட்டு நீர் பாசனம் அமைத்து செம்மை சாகுபடி முறையில் (எஸ்.எஸ்.ஐ. முறை) நடவு செய்யும் போது 40 சத மகசூல் அதிகரிக்கிறது. மேலும், இந்த முறையில் சாகுபடி செலவும் குறைவு. எனவே, அனைத்து விவசாயிகளும் செம்மை கரும்பு சாகுபடி முறையைப் பின்பற்ற வேண்டும் என்றார் முருகவேல்.

## உழவர் பாதுகாப்புத் திட்டம் : திருச்சி மாவட்டத்தில் 9.73 லட்சம் உறுப்பினர்கள்

தமிழக முதல்வரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் திருச்சி மாவட்டத்தில் 9,73,543 பேர் உறுப்பினர்களாக உள்ளனர் என்றார் மாநில பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் என்.ஆர். சிவபதி.

உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 355 பயனாளிகளுக்கு ரூ. 28.66 கோடியில் நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் சனிக்கிழமை நடைபெற்றது.கூட்டத்தில், நலத் திட்ட உதவிகளை வழங்கி அமைச்சர் பேசியது: தமிழக மக்கள் குறிப்பாக விவசாயிகளின் வாழ்வாதாரமான காவிரி பிரச்னையில் தொடர்ந்து தமிழகத்தின் உரிமைக்காக தமிழக முதல்வர் போராடி வருகிறார் என்றார் அமைச்சர்.

விழாவுக்கு தலைமை வகித்து மாவட்ட ஆட்சியர் ஜெயஸ்ரீ முரளிதரன் பேசியது: உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் காசநோய், புற்றுநோய் மற்றும் எச்.ஐ.வி ஆகிய நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இரண்டாண்டுகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000 உதவித் தொகை வழங்கப்படுகிறது.

கடந்த ஆண்டில் 7,000 பேருக்கு ரூ. 4.5 கோடியும், இந்த ஆண்டில் இதுவரையில் 13,000 உறுப்பினர்களுக்கு ரூ. 6.50 கோடியும் நிதியுதவியும் வழங்கப்பட்டுள்ளது.மேலும், இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி கோரி 30,000 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

இந்த மனுக்கள் விரைந்து பரிசீலிக்கப்பட்டு, ரூ.5 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்படவுள்ளன என்றார் ஆட்சியர்.

விழாவில், மாநகர மேயர் அ. ஜெயா, மக்களவை உறுப்பினர் ப. குமார், சட்டப்பேரவை உறுப்பினர்கள் ஆர். மனோகரன், மு. பரஞ்ஜோதி, டி.பி. பூனாட்சி, எம். சந்திரசேகரன், த. இந்திராகாந்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## மேட்டூர் அணை நீர்மட்டம் : 32.50 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 32.50 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 882 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 501 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

கல்லணையிலிருந்து வினாடிக்கு காவிரியில் 1,501 கன அடி வீதமும், வெண்ணாறு, கல்லணைக் கால்வாயில் தலா 1,500 கன அடி வீதமும், கொள்ளிடத்தில் 2,003 கன அடி வீதமும் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

## பண்ணை மீன் வளர்ப்பு பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

நாகை மாவட்டம், பூம்புகாரில் நடைபெறவுள்ள ஒருங்கிணைந்த பண்ணை மீன் வளர்ப்புப் பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர் நேர்காணலில் பங்கேற்குமாறு மயிலாடுதுறை இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிராமிய சுய வேலைவாய்ப்புப் பயிற்சி மைய இயக்குநர் வ.சி. பரமசிவன் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

மயிலாடுதுறை கிராமிய சுய வேலைவாய்ப்புப் பயிற்சி மையம் மற்றும் பூம்புகாரில் உள்ள எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றின் சார்பில் ஒருங்கிணைந்த பண்ணை மீன் வளர்ப்பு இலவசப் பயிற்சி முகாம் பூம்புகார் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

டிச. 27-ம் தேதி முதல் ஜன. 2-ம் தேதி வரை இந்த முகாம் நடைபெறும். முற்றிலும் இலவசமான இப்பயிற்சியில் நாகை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் பங்கேற்கலாம்.

பயிற்சியில் பங்கேற்க விரும்புவோரின் குறைந்தபட்ச கல்வித் தகுதி 8-ம் வகுப்புத் தேர்ச்சி. வயது வரம்பு- 18 முதல் 45. பயிற்சியாளர்கள் எண்ணிக்கை- 25.

பயிற்சிக்கான நேர்காணல், மயிலாடுதுறை பட்டமங்கலத் தெருவில் உள்ள கிராமிய சுய வேலைவாய்ப்புப் பயிற்சி மையத்திலும், பூம்புகாரில் உள்ள எம்.எஸ். சுவாமிநாதன ஆராய்ச்சி நிறுவனத்திலும் டிச. 21-ம் தேதி முதல் டிச. 22-ம் தேதி வரை நடைபெறும்.

நேர்காணலில் பங்கேற்பவர்கள், பாஸ்போர்ட் அளவு புகைப்படம் 2, கல்விச் சான்று, சாதிச் சான்று, வறுமைக் கோடு சான்று, குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை அல்லது கல்லூரி அடையாள அட்டை ஆகியவற்றின் அசல் மற்றும் நகல்களைக் கொண்டு வர வேண்டும். சரிபார்ப்புப் பணிக்குப் பின்னர் அனைத்து அசல் சான்றுகளும் திருப்பி அளிக்கப்படும். பயிற்சியில் பங்கேற்பவர்களுக்கு மதிய உணவு வழங்கப்படும்.

இது குறித்த மேலும் விவரங்களுக்கு வேளாண் ஆராய்ச்சியாளர் த. செல்வராஜை 94439 84229 என்ற செல்பேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இயற்கை முறையில் மஞ்சள் சாகு படி பயிற்சி

பெரம்பலூர் அருகே உள்ள எசனை கிராமத்தில், தனலட்சுமி சீனிவாசன் மகளிர் கலை அறிவியல் கல்லூரியின் உயிர் தொழில் நுட்பவியல் துறை சார்பில் இயற்கை முறையில் மஞ்சள் சாகுபடி குறித்த பயிற்சி முகாம் அண்மையில் நடைபெற்றது.

முகாமை தொடக்கி வைத்து பெரம்பலூர் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் சுப்ரமணியம் பேசியது:

விவசாயிகள் மண் பரிசோதனை செய்து இயற்கை மற்றும் உயிர் உரங்களை பயன்படுத்தி மண்ணை வளப்படுத்த வேண்டும். மஞ்சள் சாகுபடி செய்யும் விவசாயிகள் பூச்சி நோய் மேலாண்மை மற்றும் சத்து பற்றாக்குறையை உரிய தருணத்தில் நிவர்த்தி செய்வதால் தரமான சாகுபடி செய்து பயன் பெறலாம் என்றார் அவர்.

வட்டார தோட்டக்கலை துறை துணை இயக்குநர் சுப்ரமணியன் மஞ்சள் ரகங்கள், பயிர் செய்ய ஏற்ற பருவங்கள் குறித்தும், தனலட்சுமி சீனிவாசன் மகளிர் கல்லூரி உயிர் தொழில் நுட்பவியல் துறை தலைவர் சசிதரா உயிர் உரங்களான டிரைக்கோ டெர்மா, விரிடி, சூடோமோனாஸ் மற்றும் நுண்ணுயிர் பூச்சிக் கொல்லிகளான பேசிலோமைசிஸ், பேவேரியா போன்றவற்றின் பயன்பாடுகள் குறித்தும், திட்ட அலுவலர் முத்துகிருஷ்ணன் நுண்ணுயிர் விதை நேர்த்தி முறை குறித்தும் செயல் விளக்கத்துடன் எடுத்துரைத்தனர்.

மேலும், வேளாண் அலுவலர் கி. பச்சியம்மாள் விவசாயிகளுக்கு பண்ணை கழிவுகளை மட்க வைக்கும் முறையை விளக்கி கூறினார்.

முகாமில் பங்கேற்ற எசனை, பாப்பாங்கரை உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த மஞ்சள் சாகுபடி விவசாயிகளுக்கு சாகுபடி தொழில் நுட்பகையேடு, ஊக்கத்தொகை மற்றும் இயற்கை உரங்கள் வழங்கப்பட்டன.

## விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ளவேண்டாம் : கருணாநிதி



விவசாயிகள் யாரும் தற்கொலை செய்துகொள்ள வேண்டாம் என்று திமுக தலைவர் கருணாநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக ஞாயிற்றுக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை:

சம்பா பயிருக்குப் போதிய தண்ணீர் கிடைக்காததால், பயிர்கள் கருகியுள்ளன. அதனால் மனம் வெதும்பி, வாங்கிய கடனையும் திருப்பிச் செலுத்த முடியாமல் விவசாயிகள் தற்கொலை செய்துகொள்ளும் செய்திகள் தினமும் வருகின்றன.

டிசம்பர் 19-ம் தேதி சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் தற்கொலை செய்துகொண்ட 7 விவசாயிகளின் குடும்பங்களுக்கு திமுக சார்பில் தலா ரூ.50 ஆயிரம் நிதி வழங்கப்பட்டது.

இந்நிலையில் மீண்டும் திருவாரூர் மாவட்டத்தில் சனிக்கிழமை ஆர்.சக்திவேல் என்ற விவசாயியும், புதுக்கோட்டை மாவட்டத்தில் ரங்கசாமி என்ற விவசாயியும் தற்கொலை செய்துகொண்டுள்ளனர்.

இறந்து போகும் விவசாயிகள் தொடர்பாக ஆளும் தமிழக அரசுக்கு எந்தவிதமான அக்கறையும் இருப்பதாகத் தெரியவில்லை. டெல்டா மாவட்டங்களில் கருகும் பயிர்களைக் காண ஆட்சியாளர்களுக்கு நேரமில்லை.

அதிலும் கொடுமையாக, நாடாளுமன்றத்தில் அதிமுகவைச் சேர்ந்தவர்கள் பேசும்போது, தமிழகத்தில் விவசாயிகள் யாரும் பயிர்கள் கருகியதன் காரணமாக தற்கொலை செய்துகொள்ளவில்லை என்று கூறியிருக்கின்றனர்.

சம்பா பயிர் அடியோடு நாசமாகி கருகிக் கிடப்பது உண்மைதான். அந்த விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்றும், டெல்டா மாவட்டங்களை வறட்சி பாதித்த மாவட்டங்களாக அறிவிக்க வேண்டும் என்றும், தற்கொலை செய்துகொண்டு மறைந்த விவசாயிகளின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு அரசு வேலை வழங்க வேண்டும் என்றும் நான் கோரிக்கை வைத்தேன். ஆனால் ஏற்கப்படவில்லை.

வேண்டுகோள்: விவசாயிகளை நான் வேண்டிக் கேட்டுக் கொள்வதெல்லாம், தற்கொலை செய்து கொண்டு இறந்துபோகும் செய்திகள் இதுவரை வந்ததே கடைசியாக இருக்கட்டும்.

இனி எந்தவொரு விவசாயியும் தற்கொலை செய்துகொண்டு சாகக்கூடாது.

பயிர்கள் கருகி சேதம் ஏற்பட்டிருப்பது என்பது உண்மைதான். ஆனால் நீங்களும் தற்கொலை செய்துகொண்டால், உங்கள் குடும்பத்தின் கதி என்ன அதை எண்ணிப் பார்க்க வேண்டாமா, விவசாயிகள் கண்ணீர் சிந்திடும் நிலை மாறும் என்ற நம்பிக்கையோடு காத்திருக்க வேண்டுமே அல்லாமல், விலை மதிப்பற்ற உயிரைப் போக்கிக் கொள்ளும் விபரீத முடிவை இனியாவது விவசாயிகள் யாரும் மேற்கொள்ள வேண்டாம் என்று அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

**இழப்பீட்டை எதிர்நோக்கும் டெல்டா விவசாயிகள்**



டெல்டா மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும் சம்பா பருவ நெல் சாகுபடிக்கு கர்நாடகத்திடமிருந்து தண்ணீர் கிடைப்பதற்கான வாய்ப்புகள் இல்லாததால் இழப்பீட்டுத் தொகையை விவசாயிகள் எதிர்நோக்கத் தொடங்கியுள்ளனர்.

நிகழாண்டு மேட்டூர் அணையில் போதிய அளவுக்குத் தண்ணீர் இல்லாததால், காலம் கடந்து செப்டம்பர் 17ஆம் தேதிதான் தண்ணீர் திறக்கப்பட்டது. இதனால், குறுவை சாகுபடி இயல்பான பரப்பளவில் 50 சதவீதம்தான் மேற்கொள்ளப்பட்டது. இதுவும், நிலத்தடி நீராதாரம் உள்ள பகுதிகளில் மட்டுமே மேற்கொள்ளப்பட்டது.

எனவே, சம்பா பருவத்திலும் நெல் சாகுபடி மேற்கொள்ள விவசாயிகள் தயங்கினர். என்றாலும், பருவ மழை மூலம் திருவாரூர், நாகை மாவட்டங்களில் நேரடி விதைப்பு செய்யப்பட்டது. தஞ்சாவூர் மாவட்டத்தில் தயக்கத்துக்கிடையே நடவுப் பணி மேற்கொள்ளப்பட்டது.

இப்போது, 3 மாவட்டங்களிலும் ஏறத்தாழ 3.70 லட்சம் ஹெக்டேரில் சம்பா சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. தவிர, தாளடியும் மேற்கொள்ளப்படுகிறது. என்றாலும், இது இயல்பான பரப்பளவைவிட குறைவுதான்.

ஆனால், கர்நாடகத்திடமிருந்து நமக்குரிய தண்ணீர் கிடைக்காததால் மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனப் பகுதிக்குத் தேவையான தண்ணீர் திறந்துவிடப்படவில்லை. இதனால், ஆறுகளில் தண்ணீர் இருந்தாலும், வாய்க்கால்களுக்குத் தண்ணீர் பாயவில்லை. வடகிழக்குப் பருவ மழையும் எதிர்ப்பார்த்த அளவுக்குப் பெய்யவில்லை. இதன் காரணமாக, ஆற்றுப் பாசனத்தைச் சார்ந்த வயல்களில் ஒரு மாதமாக வெடிப்பு காணப்படுவதுடன், பயிர்களும் காய்ந்து வருகின்றன. பல இடங்களில் பயிர்கள் கருகி வருகின்றன.

இந்நிலையில், வழக்கமாக ஜனவரி 28ஆம் தேதி மூடப்பட வேண்டிய மேட்டூர் அணை கடந்த சில தினங்களுக்கு முன் மூடப்பட்டுவிட்டது.

இப்போது மேற்கொள்ளப்படும் சம்பா பயிர்களுக்கு பிப்ரவரி மாதம் வரை தண்ணீர் தேவைப்படும். அணை மூடப்பட்டதால் ஆற்றுப்பாசனத்தைச் சார்ந்த சம்பா பயிர்கள் முழுவதும் காய்ந்து விடும் அபாய நிலை உருவாகியுள்ளது.

இதேபோல, மும்முனை மின்சாரமும் போதிய அளவுக்குக் கிடைக்காததால், மோட்டார் பம்ப்செட்களை சார்ந்த சம்பா பயிர்களையும் காப்பாற்ற விவசாயிகள் பெரும் சிரமங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

எனவே, இனிமேல் பயிர்களைக் காப்பாற்ற முடியுமா என்ற சந்தேகமும் விவசாயிகள் மத்தியில் எழுந்துள்ளது.

விவசாயிகள் இதுவரை ஏக்கருக்கு ஏறத்தாழ ரூ. 20,000 செலவு செய்துள்ளனர். இதை மீட்டெடுப்பதற்கான வாய்ப்புகள் குறைந்து வருவதால், இழப்பீட்டுத் தொகையை எதிர்நோக்கத் தொடங்கியுள்ளனர்.

நிகழாண்டு டெல்டா மாவட்டங்களில் பெரும்பாலான விவசாயிகள் பயிர் காப்பீட்டுக்குப் பதிவு செய்துள்ளனர். ஆனால், அரசின் விதிகள்படி இழப்பீட்டுத் தொகை கிடைக்குமா என்ற சந்தேகமும் அவர்கள் மத்தியில் நிலவுகிறது.

தினமலர்

## 24.12.2012 A.M

### பனிப்பொழிவால் வெண்பட்டு உற்பத்தி பாதிப்பு :தேவை அதிகரிப்பால் விலை உயரும்



கோபி: தமிழகம் முழுவதும், கடுமையான பனிப்பொழிவு காணப்படுவதால், வெண்பட்டு உற்பத்தி குறைந்துள்ளது. இதனால், இதன் விலை அதிகரிக்கும் வாய்ப்புள்ளது.

கிருஷ்ணகிரி:தமிழகத்தில், ஓசூர், கிருஷ்ணகிரி, கோவை, தாளவாடி ஆகிய அரசு மையங்களில் வெண்பட்டு முட்டை உற்பத்தி செய்யப்படுகிறது. உடுமலை பேட்டை, பொள்ளாச்சி, கோபி, பவானி, சானார்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் வெண்பட்டு கூடுகள் அதிகளவில் உற்பத்தியாகின்றன.இவ்வகை கூடு உற்பத்தியில், தமிழகம் முதலிடத்தில் உள்ளது.ஈரோடு மாவட்டத்தில், 3,000 க்கும் மேற்பட்ட விவசாயிகள், 5,500 ஏக்கரில் மல்பெரி பயிரிட்டுள்ளனர். இங்கிருந்து, மாதந்தோறும், 1.40 லட்சம் கிலோ பட்டுக்கூடுகள் கோவை, தர்மபுரி, சேலம் ஆகிய மாவட்டங்களுக்கும், கர்நாடகாவில் ராம் நகருக்கும் அனுப்பப்படுகிறது.நவீன தொழில் நுட்பம்:நவீன தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி மூலம், தமிழகத்தில் வெண்பட்டு புழு வளர்ப்பு முறையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பட்டு புழு உற்பத்தியை பெருக்க, ஜப்பான் நாட்டு உதவியுடன், 'ஜைகா' என்ற திட்டம் தமிழகத்தில் செயல்படுத்தப்படுகிறது. மத்திய பட்டு வளர்ச்சி துறை, மாநில பட்டு வளர்ச்சி துறை சார் பில், பட்டு வளர்ச்சியை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஜப்பான் நாட்டை சேர்ந்த ஆய்வுக் குழுவினர் கர்நாடகா, தமிழகம், ஆந்திரா மாநிலங்களில் நடைபெறும், பட்டு வளர்ச்சி குறித்து ஆய்வு செய்து, அறிக்கை தாக்கல் செய்கின்றனர்.உற்பத்தி குறைவு:இந்தியாவை பொறுத்தவரை ஆண்டுக்கு, 25 ஆயிரம் டன் பட்டுநூல் தேவைப்படுகிறது. ஆனால், உற்பத்தி, 14 ஆயிரம் டன் என்ற அளவிற்கே உள்ளது.இந்த பற்றாக்குறையை ஈடுசெய்ய, சீனாவில் இருந்து பட்டுநூல் இறக்குமதி செய்யப்படுகிறது. இந்நிலையில், சீனாவில் வெண்பட்டு உற்பத்தி குறைந்ததால், இந்தியாவில் உற்பத்தியாகும் வெண்பட்டுக்கு, அதிகளவில்

கிராக்கி ஏற்பட்டுள்ளது.

நடப்பாண்டு வெண்பட்டு விலை கிலோ, 400 ரூபாய்க்கு மேல் உயரும் என, உற்பத்தியாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.மல்பெரி செடிகள்:இதுகுறித்து, பட்டு வளர்ச்சித் துறை அதிகாரி கூறியதாவது:தமிழகத்தில், ஈரோடு மாவட்டத்தில், 75 சதவீத பட்டுக்கூடு உற்பத்தி செய்யப்படுகிறது. நடப்பாண்டு பருவமழை தவறியதால், மல்பெரி செடிகளின் வளர்ச்சி தடைபட்டுள்ளது. இம்மாவட்டத்தில் பனிப்பொழிவால் மட்டுமே, மல்பெரி இலை உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.கிணற்று பாசனம் மூலம் ஓரளவுக்கு செடி செழிப்பாக உள்ளது. மாதந்தோறும், 1.40 லட்சம் கிலோ பட்டுக்கூடு உற்பத்தியாகிறது. பனிப்பொழிவால், 20 ஆயிரம் கூடுகளின் உற்பத்தி குறைந்துள்ளது.தற்போதைய, நிலவரப்படி மஞ்சள் கூடு, 200 முதல், 266 ரூபாய்க்கும், வெள்ளை கூடு, 287 முதல், 365 ரூபாய் வரையும் விற்பனையாகிறது. வெண் பட்டுக்கூட்டிற்கு, தேவை அதிகரிப்பால், 400 ரூபாய்க்கு மேல் விலை உயரும் என, எதிர்பார்க்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

## சர்வதேச சந்தையில் பால் பொருட்கள் விலை உயருகிறது :மகிழ்ச்சியில் இந்திய ஏற்றுமதியாளர்கள்



சர்வதேச சந்தையில் பால் பொருட்கள் விலை உயருகிறது:மகிழ்ச்சியில் இந்திய ஏற்றுமதியாளர்கள்பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகளில், கால்நடை தீவனங்கள் உள்ளிட்ட மூலப்பொருட்களின் விலை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருகிறது.இதன் விளைவாக, இந்நாடுகளில் பால் மற்றும் பால் பொருட்கள் விலை உயர்ந்துள்ளது.அதே சமயம், சர்வதேச பொருளாதார மந்தநிலையால், பாலுக்கான தேவையும் குறைந்துள்ளது.

ஐரோப்பிய நாடுகள்:இதனால், அந்நாடுகளில் பால் விற்பனை பாதிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து அதன் உற்பத்தியை பால் பண்ணையாளர்கள் குறைத்து வருகின்றனர்.இதன் காரணமாக, சர்வதேச சந்தையில், ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகளின் பால் பொருட்கள் பங்களிப்பு குறைந்துள்ளது.அதுபோன்று, அமெரிக்க பால் வளத் துறையும், வறட்சி, புயல், உற்பத்தி செலவு அதிகரிப்பு போன்றவற்றால் பாதிக்கப்பட்டுள்ளது. இதுவும், சர்வதேச பால் சந்தையில் பால் பொருட்களுக்கு பற்றாக்குறையை உருவாக்கியுள்ளது.

இதன் விளைவாக, நடப்பு டிசம்பர் வரையிலான காலாண்டில், பால் பொருட்களின் விலை, 10 சதவீதம் உயர்ந்துள்ளதாக, ரபோ பேங்க் மதிப்பிட்டுள்ளது.இதே நிலை, அடுத்த இரண்டு காலாண்டுகளிலும், அதாவது, வரும் 2013ம் ஆண்டு ஜூன் வரையில் நிலவும் என, எதிர்பார்க்கப்படுகிறது.சாதகமான அம்சம்:இத்தகைய சூழல், இந்திய பால் பொருட்களை ஏற்றுமதி செய்யும் நிறுவனங்களுக்கு சாதகமான அம்சமாக கருதப்படுகிறது.

உள்நாட்டில் பால் உற்பத்தி அபரிமிதமாக உயர்ந்ததை அடுத்து, கடந்த நவம்பர் 21ல், பால் பொருட்கள் ஏற்றுமதி மீதான தடையை மத்திய அரசு நீக்கியது.இதன்படி, பால் மற்றும் கிரீம், பால் பவுடர், குழந்தைகளுக்கான பால் உணவுகள், பால் பொருள் நிறமிகள் போன்றவை ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன.பால் பொருட்களுக்கு, சர்வதேச சந்தையில் நல்ல விலையும் கிடைத்து வருகிறது.

பால் பவுடர்:உதாரணமாக, சென்ற செப்டம்பர் வரையிலான காலாண்டில், ஒட்டுமொத்த பால் பவுடர் விலை, டன்னுக்கு 2,965 டாலராக இருந்தது. இது, நடப்பு டிசம்பர் வரையிலான காலாண்டில், 3,345 டாலராக உயர்ந்துள்ளது. அதாவது, கடந்த ஆறு மாதங்களில், டன்னுக்கு 380 டாலர் அதிகரித்துள்ளது.இது, வரும் 2013ம் ஆண்டின், மார்ச் வரையிலான முதல் காலாண்டில், மேலும், 165 டாலர் அதிகரித்து 3,510 டாலராகவும், இரண்டாம் காலாண்டில், 3,826 டாலராகவும் உயரும் என, ரபோ பேங்க் மதிப்பிட்டுள்ளது.கொழுப்பு நீக்கப்பட்ட பால் பவுடர் விலை, நடப்பாண்டின் இரண்டாவது அரையாண்டில், டன்னுக்கு 410 டாலர் அதிகரித்து, 2,975லிருந்து 3,385 டாலராக உயர்ந்துள்ளது.

இது, வரும் 2013ம் ஆண்டின், அரையாண்டின் இறுதிக்குள், 362 டாலர் அதிகரித்து, 3,747 டாலராக உயரும் என, எதிர்பார்க்கப்படுகிறது. அதுபோன்று, நடப்பாண்டின், இரண்டாவது அரையாண்டில், ஒரு டன் வெண்ணெயின் விலை, 317 டாலர் அதிகரித்து, 2,938லிருந்து 3,255 டாலராக உயர்ந்துள்ளது.இது, வரும் ஆண்டில், ஜனவரி முதல் ஜூன் வரையிலான காலத்தில்,319 டாலர் உயர்ந்து 3,574 டாலராக அதிகரிக்கும் என, தெரிகிறது.பாலாடை கட்டிசர்வதேச சந்தையில், நடப்பாண்டில், ஒரு டன் பாலாடை கட்டியின் விலை, 325 டாலர் உயர்ந்து

3,625லிருந்து 3,950 டாலராக உயர்ந்துள்ளது.

இது வரும் ஆண்டின் மத்தியில், 4,366 டாலராக உயரும்.சென்ற ஜூலை முதல், வரும் ஆண்டு ஜூன் வரையிலான ஓராண்டில், பாலாடை பவுடர் விலை டன்னுக்கு, 256 டாலர் அதிகரித்து, 1,245 லிருந்து 1,501 டாலராக உயரும் என, ரபோ பேங்க் மதிப்பிட்டுள்ளது.சர்வதேச சந்தையில் பால் பொருட்கள் விலை உயர்ந்து வருவது, இந்தியாவில் இத்துறை சார்ந்த ஏற்றுமதியாளர்களுக்கு சாதகமாக உள்ளது.- பிசினஸ் ஸ்டாண்டர்ட் உடன் இணைந்து –

**சாகுபடி பரப்பளவு குறைந்துள்ளதால் நெல் , கோதுமை உற்பத்தி சரிவடையும்**



புதுடில்லி:நடப்பு வேளாண் பருவத்தில், உணவு தானியங்கள் சாகுபடி பரப்பளவு குறைந்துள்ளது. இதனால், இவற்றின் உற்பத்தி குறையும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.உள்நாட்டில், தாமதமான மற்றும் குறைவான மழைப் பொழிவால், அண்மையில் முடிவுற்ற கரீப் பருவத்தில், நெல் சாகுபடி பரப்பளவு குறைந்துள்ளது. இதனால், நெல் உற்பத்தி, கடந்த பருவத்தை விட, நடப்பு பருவத்தில் குறையும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

பஞ்சாப்:நடப்பு ரபி பருவத்தில், சென்ற 21ம் தேதி வரையிலுமாக, 2.53 கோடி ஹெக்டேரில் கோதுமை பரியிடப்பட்டுள்ளது. இது, சென்ற பருவத்தின், இதே காலத்தில், 2.57 கோடி ஹெக்டேராக உயர்ந்திருந்தது.இந்தியாவில் கோதுமை சாகுபடியில், பஞ்சாப், அரியானா மாநிலங்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க அளவில் உள்ளது. நடப்பு பருவத்தில், மத்திய பிரதேசம், ராஜஸ்தான், அசாம், பீகார், சத்தீஸ்கர், ஜார்க்கண்ட் உள்ளிட்ட மாநிலங்களில், கோதுமை சாகுபடி பரப்பளவு அதிகரித்துள்ளது.

அதேசமயம், மகாராஷ்டிரா, உத்தரகாண்ட், குஜராத், மேற்கு வங்கம், கர்நாடகா, அரியானா ஆகிய மாநிலங்களில் இதன் சாகுபடி பரப்பளவு குறைந்துள்ளது.சென்ற வேளாண் பருவத்தில், சாதகமான பருவ நிலை நிலவியதால், கோதுமை உற்பத்தி, சாதனை அளவாக, 9.93 கோடி

டன்னாக அதிகரித்திருந்தது. நடப்பு பருவத்தில், பருவ மழை குறைந்துள்ளதால், 8.60 கோடி டன் கோதுமை உற்பத்தி செய்ய, மத்திய வேளாண் அமைச்சகம் இலக்கு நிர்ணயித்துள்ளது.

நெல் சாகுபடி :நடப்பு பருவத்தில், நெல் சாகுபடி பரப்பளவு, 2.78 லட்சம் ஹெக்டேரிலிருந்து, 1.71 லட்சம் ஹெக்டேராக குறைந்துஉள்ளது. பருப்பு வகைகள் சாகுபடி பரப்பளவு, 1.29 கோடி ஹெக்டேரிலிருந்து, 1.28 கோடி ஹெக்டேராக குறைந்துள்ளது.நிலக்கடலை, சூரியகாந்தி எண்ணெய் வித்துக்கள் சாகுபடி பரப்பளவு, 5 சதவீதம் உயர்ந்து, 76 லட்சம் ஹெக்டேரிலிருந்து, 80 லட்சம் ஹெக்டேராக உயர்ந்துள்ளது.

இதில், நிலக்கடலை சாகுபடி பரப்பளவு, 54.4 சதவீதம் வளர்ச்சிகண்டு, 3.44 லட்சம் ஹெக்டேரிலிருந்து, 5.32 லட்சம் ஹெக்டேராக அதிகரித்துள்ளது. சூரியகாந்தி 20.6 சதவீதம் வளர்ச்சிஅடைந்து, 4.76 லட்சம் ஹெக்டேராகஉயர்ந்துள்ளது. கடுகு சாகுபடி பரப்பளவு, 2.8 சதவீதம் உயர்ந்து, 62.60 லட்சம் ஹெக்டேரிலிருந்து, 64.40 லட்சம் ஹெக்டேராக அதிகரித்துள்ளது.

## தேங்காய் எண்ணெய்விலை குறைய வாய்ப்பு



கொச்சி:நடப்பாண்டில், தமிழகம் மற்றும் கர்நாடகாவில் இருந்து, கொப்பரை வரத்து அதிகரித்துள்ளது. இதனால், தேங்காய் எண்ணெய் விலை குறைய வாய்ப்புள்ளதாக, இத்துறையைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் தெரிவித்தார்.விளைச்சல் அதிகரித்துள்ளதன் காரணமாக, இலங்கைக்கு போட்டியாக, நம்நாட்டின் தேங்காய் மற்றும் தேங்காய் எண்ணெய் ஏற்றுமதி சூடுபிடிக்கத் துவங்கிஉள்ளது.

குறிப்பாக, கேரள மக்கள் அதிகளவில் இடம்பெயர்ந்து வசிக்கும், மத்திய கிழக்கு நாடுகளுக்கு, இவற்றின் ஏற்றுமதி, சிறப்பான அளவில் உயர்ந்துள்ளது.இதை எடுத்துகாட்டும் வகையில், நடப்பாண்டு ஜூலை மாதம் வரையிலான காலத்தில், அளவின் அடிப்படையிலான இவற்றின்

ஏற்றுமதி, 50 சதவீத அளவிற்கும், மதிப்பின் அடிப்படையிலான ஏற்றுமதி, 22 சதவீத அளவிற்கும் வளர்ச்சி கண்டுள்ளது.நம்நாட்டிலிருந்து, 2011 - 12ம் பருவத்தில், 24,345 டன் தேங்காய் ஏற்றுமதியாகி உள்ளது.

இதன் மதிப்பு, 52 கோடி ரூபாயாகும் என, இந்திய தேங்காய் வாரியம் தெரிவித்து உள்ளது.இதை மேலும் அதிகரிக்கும் வகையில், தென் மாநில துறைமுகங்களிலிருந்து ஏற்றுமதியாகும், தேங்காய் எண்ணெய்க்கான அளவின் மீதான கட்டுப்பாடுகளை நீக்கி, பெருமளவு ஏற்றுமதி செய்ய அனுமதிக்க வேண்டும் என, மத்திய அரசிடம், தேங்காய் வாரியம் கோரிக்கை விடுத்துள்ளது.

## டெல்டா விவசா யிகளிடம் அதிகாரிகள் ... தண்ணீரின்றி கருகும் சம்பா பயிர்

சிதம்பரம்:பழைய டெல்டா, புதிய டெல்டா விவசாயிகள் என பொதுப் பணித் துறை அதிகாரிகள் பாரபட்சம் காட்டுவதால் மாவட்டத்தில் பயிர் செய்த சம்பா பயிர்கள் கருகி வீணாகும் நிலை உள்ளது.

கடலூர் மாவட்ட டெல்டா பகுதியான சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் பகுதியில் உள்ள ஒரு லட்சத்து 1,130 ஏக்கர் பரப்பில் உள்ள நிலங்கள் காவிரி நீர் பாசனம் பெறுகிறது. இந்த ஆண்டு கடலூர் டெல்டா பகுதியில் 97 ஆயிரம் ஏக்கர் பரப்பில் சம்பா சாகுபடி செய்யப்பட்டுள்ளது. சாகுபடி துவக்கம் முதல் தண்ணீர் இல்லாமல் விவசாயிகள் அவதியடைந்து வருகின்றனர். கடந்த 15 நாட்களாக கடலூர் டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறக்கவில்லை.

சம்பா சாகுபடி செய்துள்ள மொத்த பரப்பில் செப்டம்பர் மாதம் பெய்த மழையில் நேரடி நெல் விதைப்பு செய்த 25 ஆயிரம் ஏக்கர் நெற்பயிரில் பூ வெளியில் வந்துள்ளது. இந்த சாகுபடி பயிர் ஒரு மாத காலத்தில் அறுவடைக்கு தயாராகும்.

கருகிய பயிர்கள்

பூ வந்த பருவத்தில் உள்ள நெல் பயிருக்கு தற்போது அவசியம் தண்ணீர் தேவைப்படுகிறது. சம்பா சாகுபடியில் 55 ஆயிரம் ஏக்கர் 50 முதல் 60 நாட்கள் கொண்ட பயிராக வளர்ந்து வருகிறது. 15 ஆயிரம் ஏக்கரில் இளம் பயிர்களாக உள்ளது. இந்த இளம் பயிர்களுக்கு இரு மாதங்களுக்கு தண்ணீர் தேவை. டெல்டாவில் கடைமடை மற்றும் மேடான பகுதிகளில் சில ஆயிரம் ஏக்கர் தண்ணீர் இல்லாமல் சாகுபடி செய்த சம்பா பயிர்கள் கருகி சேதமடைந்துவிட்டது.

சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் டெல்டா பாசனத்திற்கு அணைக்கரை கீழணையில் இருந்து இந்த ஆண்டு மூன்று முறை மட்டுமே தண்ணீர் திறக்கப்பட்டது. அந்த தண்ணீரும் பாசனத்திற்கு போதுமானதாக இல்லை.

கைவிரிப்பு

கீழணையில் இருந்து கடைசியாக கடந்த 1ம் தேதி தண்ணீர் திறந்தனர். தற்போது விவசாயிகள் தண்ணீர் கேட்டதற்கு கீழணையில் தண்ணீர் இல்லை. அதனால் பாசனத்திற்கு திறக்கவில்லை என பொதுப் பணித்துறை அதிகாரிகள் கைவிரித்தனர்.

இயற்கையும் மழை வருவது போல் மேகமூட்டம் காணப்படுகிறது. ஆனால் மழை பெய்யவில்லை . கடந்த மாதம் இரு முறை மழை வரும் என எதிர்பார்த்தும் வரவில்லை. சில தினங்களுக்கு முன்னும் மழை பெய்யும் என எதிர்பார்த்த போதிலும் பெய்யவில்லை.

கடலூர் டெல்டா பகுதியில் சாகுபடி செய்துள்ள 97 ஆயிரம் ஏக்கர் சம்பா நெற்பயிர் முற்றிலும் தண்ணீர் இல்லாமல் கருகும் நிலை ஏற்பட்டுள்ளது.

பிரதிநிதித்துவம்

மேட்டூர் அணையில் இருந்து கல்லணைக்கு பாசனத்திற்கு 8,000 கன அடி வீதம் தண்ணீர் வரத்து உள்ளது. இதனை பிரதிநிதித்துவம் முறையில் பழைய டெல்டா பகுதிக்கு மட்டும் பாசனத்திற்கு திறப்பதாக கூறி, பழைய டெல்டா பகுதி வெண்ணாற்றிலும், பழைய டெல்டா அல்லாத கல்லணை கால் வாயிலும் தண்ணீர் திறந்து விடுகின்றனர். இதனால் மற்ற பகுதி டெல்டா விவசாயிகள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

கடலூர் டெல்டா பகுதிக்கு கல்லணைக்கு வரும் தண்ணீரில் 10 சதவீதம் பாசனத்திற்கு திறக்க வேண்டும் என விதிமுறை இருந்தும் திறப்பதில்லை. இதனால் சிதம்பரம் காட்டு மன்னார்கோவில் சம்பா சாகுபடி தண்ணீர் இல்லாமல் பாதித்துள்ளது.

பாரபட்சம்

பழைய டெல்டா விவசாயிகளிடம் கடலூர் டெல்டா விவசாயிகள் எந்த விதத்திலும் சளைத்தவர்கள் இல்லை. சாகுபடியில் கூடுதல் மகசூல், தீவிர சாகுபடி, தொழில் நுட்பம் என அனைத்திலும் கடலூர் டெல்டா விவசாயிகள் சாதித்து வருகின்றனர்.

இந்நிலையில் பழைய டெல்டா விவசாயிகள், புதிய டெல்டா விவசாயிகள் என பிரித்தாளும் சூழ்ச்சியில் பொதுப்பணித்துறை உயரதிகாரிகள் இறங்கியுள்ளனர். பாரபட்சத்தோடு பாசனத்திற்கு தண்ணீர் திறக்காமல் இருப்பதால் கடலூர் டெல்டா விவசாயிகள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

**தியாகதுருகத்தில் பருத்தி அறுவடை துவக்கம் கூடுதல் விலை எதிர்பார்க்கு ம் விவசாயிகள்**

தியாகதுருகம்,:தியாகதுருகம் பகுதியில் மானாவாரியில் சாகுபடி செய்துள்ள பருத்தி செடிகளில் இருந்து பஞ்சு அறுவடையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

தியாகதுருகம் பகுதியில் விருகாவூர், சித்தலூர், முடியனூர், பானையங்கால், பொரசக்குறிச்சி, கண்டாச்சிமங்கலம், வரஞ்சரம், கூத்தக்குடி, நாகலூர், எஸ்.ஒகையூர் உள்ளிட்ட 15க்கும் மேற்பட்ட கிராமங்களில் மானாவாரி நிலங்களில் 5,000 ஏக்கர் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆகஸ்ட் மாதம் பெய்த மழை ஈரத்தில் விதைப்பு பணிகளை முடித்தனர். அதைத்தொடர்ந்து அவ்வப்போது பெய்த மழையின்போது களை பறித்தும் உரங்கள் போட்டும் பராமரித்தனர். இதன் காரணமாக செடிகளில் அதிக அளவு காய்கள் காய்த்து செழிப்புடன் காணப்
பட்டது.

இத்தருணத்தில் போதிய
மழையளவு கிடைக்காமல் செடிகள் வாடியது.

கடந்த 20 நாட்களுக்கு முன் லேசான மழை பெய்தது வரபிரசாதமாக அமைந்தது. தற்போது காய்கள் முற்றியதால் வெடித்து அதில் இருந்து பஞ்சு வெளிப்பட்டுள்ளது. இதை சேகரிக்கும் பணியில்
விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

பனிப்பொழிவு இருப்பதால் பஞ்சு நனைந்து சேதமடையாமல் இருக்கும் வகையில் உடனுக்குடன் பஞ்சை சேகரித்து வருகின்றனர்.

கடந்த ஆண்டு "தானே' புயல் காரணமாக பருத்தி அறுவடை தருணத்தில் செடிகள் மண்ணில் சாய்ந்து மகசூல் கடுமையாக பாதிக்கப்பட்டு நஷ்டம் ஏற்பட்டது. தற்போது ஊட்டமாக வளர்ந்துள்ள செடிகளில் மகசூல் கூடுதலாக கிடைக்கும் என்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கடந்த இரு வாரங்களாக கள்ளக்குறிச்சி பருத்தி மார்க்கெட் திறக்கப்பட்டு புதன் கிழமை தோறும் விற்பனை நடந்து வருகிறது. கடந்த வார நிலவரப்படி ஒரு குவிண்டால் பஞ்சு மூட்டை 4,209 ரூபாய் வரை விலைபோனது. மேலும் விலை அதிகரிக்கும் என்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**ஊட்டி தேயிலை சுற்றுலா விழாவில் முதல்முறையாக "கோடநாடு டீ'**

ஊட்டி : ஊட்டி தேயிலை சுற்றுலா விழாவில், கோடநாடு தேயிலை தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை தூள், முதன் முறையாக காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

முதல்வர் ஜெ.,வுக்கு சொந்தமானதாக கூறப்படும், நீலகிரி மாவட்டம் கோத்தகிரி கோடநாடு தேயிலை தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை தூள், பெரும்பாலும் தேயிலை ஏல மையம் வாயிலாக மட்டுமே விற்கப்படுகிறது; சில்லரை விற்பனை செய்யப்படுவதில்லை.

ஊட்டியில் கடந்த இரண்டு நாளாக நடைபெற்று வரும் தேயிலை சுற்றுலா விழாவில், முதல்முறையாக கோடநாடு தேயிலை தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை தூள், உள்ளூர் சந்தையில் விற்க, காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

தொழிற்சாலை அலுவலர் கூறியதாவது:

கோடநாடு தேயிலை தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் ஆர்தோடக்ஸ், கிரீன் டீ, ஒயிட் டீ போன்றவை, நேரடியாக டென்மார்க் நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. முதன் முறையாக, "கோடநாடு டீ' என்ற பெயரில், பாக்கெட்டுகளில் அடைக்கப்பட்டு, உள்ளூர் சந்தையில் விற்க திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

## தையூரில் டிரான்ஸ்பார்மர் பழுதானதால் நெல் பயிர்கள் கருகும் பரிதாப நிலை

செஞ்சி:தையூரில் டிரான்ஸ்பார்மர் பழுதானதால் பயிர்கள் கருகும் நிலை ஏற்பட்டுள்ளது.

செஞ்சி தாலுகா தையூர் கிராமத்தில் உள்ள டிரான்ஸ் பார்மர் கடந்த சில மாதங்களாக அடுத்தடுத்து பழுதாகியுள்ளது. இந்த டிரான்ஸ் பார்மரில் இருந்து 37 விவசாய மின் மோட்டார்களுக்கும், ஒரு தெருவிற்கும் மின் சப்ளை செல்கிறது. கடந்த 9 மாதத்தில் மூன்று முறை பழுதான இந்த டிரான்ஸ்பார்மரை விவசாயிகள் தங்கள் சொந்த செலவில் சரி செய்து வைத்தனர். தற்போது மீண்டும் டிரான்ஸ்பார் பழுதானதால் என்ன செய்வதென்று புரியாமல் விவசாயிகள் குழப்பமடைந்துள்ளனர்.

தண்ணீர் பாய்ச்சுவதற்கு வழியின்றி இப்பகுதியில் பயிரிடப்பட்டுள்ள 100 ஏக்கர் நெற்பயிர்கள் அடுத்த நில நாட்களில் காய்ந்து விடும் என விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

இது குறித்து மொடையூரில் உள்ள மின்வாரிய அதிகாரிகளிடம் புகார் செய்தும் பிரச்னை தீரவில்லை என விவசாயிகள் கூறுகின்றனர்.

தண்ணீர் பாய்ச்ச முடியாமல் சில விவசாயிகள் பயிரில் மாட்டை விட்டு மேய்த்து விட்டனர்.

மீதம் உள்ள பயிர்களை காப்பாற்றுவதற்கு மின்துறை அதிகாரிகள் விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## விக்கிரவாண்டியில் கத்தரிக்காய் விளைச்சல் ... திடீர் விலை சரிவால் விவசாயிகள் கவலை

விக்கிரவாண்டி:விக்கிரவாண்டி அடுத்த
ராதாபுரத்தில் கத்தரிக்காய் அமோக விளைச்சல் கண்டுள்ளது. இருந்தாலும் சரியான விலை கிடைக்காததால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

விவசாயிகள் நெல், மணிலா, கரும்பு என பருவ கால பயிர்களை சாகுபடி செய்து குறிப்பிட்ட காலத்திற்கு பிறகு, தங்கள் உழைப்பிற்கான பலனை பெற்றனர்.

தற்பொது ஆட்கள் பற்றாக்குறை ஏற்ப்பட்டிருப்பதால் தங்கள் உழைப்பிற்கு உடனடி பலன் தரும் பயிர்களை சாகுபடி செய்ய துவங்கியுள்ளனர். தினமும் அல்லது வாரம் ஒருமுறை உழைப்பிற்கான பலனை கை நிறைய பார்க்க ஆரம்பித்து விட்டனர்.

அந்த வகையில் விக்கிரவாண்டி அடுத்த ராதாபுரம் பகுதி விவசாயிகள் அன்றாடம் பொதுமக்கள் பயன்படுத்தும் கத்தரிக்காயை சாகுபடி செய்துள்ளனர்.

இதனை வாரம் ஒரு முறை அறுவடை செய்து சென்னை கோயம்பேடு மார்க்கட்டிற்கு அனுப்பி, பணம் சாம்பாதிக்கின்றனர். அதிக விளைச்சல் மற்றும் மகசூலை தரக்கூடிய ரகமாக உஜாலா ரக கத்தரிக்காயை பயிர் செய்துள்ளனர்.

இந்த ரக காய்கள் ஏக்கருக்கு வாரந்தோறும் 600 கிலோ முதல் 700 கிலோ வரை மகசூல் கிடைக்கிறது. ராதாபுரத்தை சேர்ந்த மாணிக்கம்,58, என்பவர் இரண்டு ஏக்கர் நிலத்தில் உஜாலா ரக கத்தரிக்காயை பயிரிட்டுள்ளார்.

வாரத்திற்கு ஒரு முறை 20
(70 கிலோ) மூட்டைகள் கத்தரிக்காய் அறுவடை செய்வதாக
கூறுகிறார்.

சென்னையில் ஆரம்ப காலத்தில் கிலோ 20 ரூபாய் முதல் 25 ரூபாய் வரை விற்கப்பட்ட கத்தரிக்காய், தற்போது அதிக விளைச்சல் காரணமாக விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

கிலோ 8 லிருந்து 10 ரூபாய் வரை விற்பதால் சரியான லாபம் கிடைக்கவில்லை என விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். வரும் தை மாதத்தில் விலை ஏறுமுகமாக இருக்கும், அந்த நேரங்களில் அறுவடை செய்பவர்களுக்கு நல்ல பலன் கிடைக்கும் என விவசாயிகள் கூறினார்.

அமோக விளைச்சல் நேரத்தில் தங்கள் விளைபொருளுக்கு ஏற்ற விலை கிடைக்காததால் இப்பகுதி விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

## வேதையில் பழு பாகற்காய் விளைச்சல் அதிகரிப்பு

வேதாரண்யம்: வேதாரண்யம் பகுதியில் மருத்துவ குணம் கொண்ட, பழு பாகற்காய் அதிகளவில் விளைவிக்கப்படுகிறது.ஆரம்ப காலத்தில் பழு பாகற்காய் கோடியக்காடு, கோடிக்கரை போன்ற காட்டுப்பகுதிகளில் பறவைகள் மூலம் பரவி தானாக வளர்ந்து வந்தது. தற்போது, பத்து ஆண்டுகளாக வேதாரண்யம் பகுதியில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. வேதாரண்யம் பகுதியை சேர்ந்த செம்போடை, கத்தரிபுலம், நாலுவேதபதி, கரும்பபம்புலம் பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.பாகற்காயில் கொம்பு பாகற்காய், மெரி பாகற்காய் போன்றவை கசப்பு தன்மை கொண்டவை. இவை சைவ சமையலுக்கு மட்டுமே பயன்படுத்த முடியும், தோற்றத்தில் பலாப்பலம் போல் உள்ள பழு பாகற்காய் சிறிய வடிவில் இனிப்பு தன்மை உடையது. இது சைவ சமையல் மட்டுமன்றி அசைவ உணவில் பயன்படுத்தலாம். மிகவும் சுவையுடைதாக இருக்கும். இந்த பாகற்காய் கிழங்கு மூலம் சாகுபடி செய்யப்படுகிறது.இதன் வளர்ச்சிக்கு மிதமாவ தட்பவெட்பநிலை போதுமானது. அதிக உரம் தேவையில்லை. இதனால், அதிக செலவில்லாமல் பழு பாகற்காயை சாகுபடி செய்ய முடியும். அக்டோபர் மாதம் முதல் மார்ச் வரை காய் காய்க்கும். ஒரு செடிக்கு இரண்டு கிலோ காய்கள் காய்க்கும். விவசாயிகளிடம் இருந்து கிலோ, 60 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்டு, கடைகளில், நூறு முதல் 120 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. செடியில் உள்ள பச்சை புழுவால் மகசூல் பாதிக்கப்படுகிறது.இதை கட்டுப்படுத்த, தோட்டக்கலைத்துறையினர் உரிய சாகுபடி முறைகளை தெரிவித்தால், விவசாயிகள் அதிகளவில் பழு பாகற்காய் சாகுபடி செய்யமுடியும். பழு பாகற்காய் உணவுக்கு மட்டுமல்லாமல் மருத்துவத்துக்கும் பயன்படுகிறது. சர்க்கரை நோய், இருதய நோய், ரத்த அழுத்தம் போன்ற நோய்களுக்கு, பழு பாகற்காய் சாப்பிட்டால் நோய்கள் குணமாகும்.

**மழையில்லை : விவசாயிகள் பாதிப்பு**

ஒட்டன்சத்திரம்:பருவமழை பொய்த்ததால்,ஒட்டன்சத்திரத்தில் உள்ள குளம், கண்மாய்கள், நீர் வரத்தின்றி வறண்டு காணப்படுகிறது. இதனால் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.
ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றியுள்ள கிராமப்பகுதிகளில் போதிய பருவ மழை பெய்யவில்லை.
இதன் காரணமாக இப்பகுதியில் உள்ள குளம், கண்மாய்கள் நீரின்றி வறண்டு காணப்படுகிறது.
கடந்த நவம்பரில் பரப்பலாறு அணை நிரம்பியதால், உபரி திறந்து விடப்பட்டது.
இந்த நீர் நேரிடையாக குளம் கண்மாய்களை சென்றடைந்ததால், குளங்களில் விவசாயம் செய்வதற்கு போதுமான நீர் இருந்தது.
இதனால் விவசாயிகள் உற்சாகத்துடன் வேளாண் மை தொழிலில் ஈடுபட்டனர்.

மழை பெய்யும் என்ற நம்பிக்கையில், மானாவாரி நிலங்களில் விதைத்த விவசாயிகள் விதைத்த பயிர்களை காப்பாற்ற என்ன வழி என்று தெரியாமல் கவலையில் உள்ளனர்.

நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருவதால், கிணறுகளில் நீர் இருப்பும் குறைவாக உள்ளது.

கிணற்றுப் பாசன விவசாயிகளும் அடுத்த கட்ட வேளாண் சாகுபடி வேலைகளை செய்வதற்கு தயங்குகின்றனர்.

## தேனி உழவர் சந்தையில் காய்கறி விற்பனை அதிகரிப்பு

தேனி:தேனி உழவர்சந்தையில் காய்கறி விலைகள் சீரான நிலையில் இருப்பதால், விற்பனை அதிகரித்துள்ளது.

கோயில் சீசன் என்பதாலும், மார்கழி மாதம் என்பாதாலும் காய்கறி விற்பனை தேனியில் களைகட்டி உள்ளது. உழவர்சந்தைக்கு நேற்று 73 விவசாயிகள், 36 டன் எடையுள்ள 58 வகையான காய்கறிகளை கொண்டு வந்திருந்தனர்.

இவற்றின் விற்பனை மதிப்பு 6 லட்சத்து 33 ஆயிரம் ரூபாய். 5,183 பயனாளிகள் வந்து காய்கறிகளை வாங்கிச் சென்றனர். விலைகளும் சீரான நிலையில் இருந்தன.

விலை விபரம், கிலோவிற்கு ரூபாயில்: கத்தரி- 20, தக்காளி- 16, வெண்டைக்காய்- 14, அவரைக்காய்- 20, கொத்தவரைக்காய்- 8, சுரைக்காய்- 10, புடலங்காய்- 12, பாகற்காய்- 20, பூசணிக்காய்- 8, பச்சைமிளகாய்- 25, கருவேப்பிலை- 25, மல்லி- 30, சம்பா- 24, தேங்காய்- 6, பீட்ரூட்- 12, நூக்கல்- 16, முள்ளங்கி- 10, முருங்கை பீன்ஸ் 24, பட்டர் பீன்ஸ் 60, முட்டைக்கோஸ்- 8, காரட்- 16, டர்னிப்- 15, சவ்சவ்- 15, பச்சைபட்டாணி- 40, பூண்டு- 40, இஞ்சி- 55, உருளைக்கிழங்கு- 26, கருணைக்கிழங்கு- 16, சேனைக்கிழங்கு- 20, மாங்காய்- 30, மொச்சை- 35, துவரைங்காய்-30, தட்டாங்காய்-30.

## பப்பாளியை தாக்கும் வைரஸ் நோய்

ஆண்டிபட்டி:தேனி மாவட்டம் ஆண்டிபட்டி பகுதியில் பப்பாளியில், வைரஸ் நோய் தாக்குதலால் விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர்.

திம்மரசநாயக்கனூர், பொம்மிநாயக்கன்பட்டி பகுதிகளில் 1000 ஏக்கரில் பப்பாளி சாகுபடி செய்துள்ளனர்.

ஒட்டு ரக பப்பாளிகள் நடவு செய்த ஆறு மாதங்களில் காய்க்கத் துவங்கும். தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு மேல், பப்பாளி பறிக்கப்பட்டு விற்பனைக்கு அனுப்பப்படும்.

கடந்த சில வாரங்களாக, பப்பாளி மரங்களில் இலைகள் சுருண்டும், மஞ்சள் நிறமாகவும் மாறி

உதிர்ந்து பாதிப்பை ஏற்படுத்துகிறது.நோய் தாக்கம் கண்ட பப்பாளி மரங்களில், காய்கள், சிறுத்துப் போவதால் மகசூல் பாதிக்கிறது.

பப்பாளியில் பரவி வரும் நோயை கட்டுப்படுத்த, பூச்சி மருந்து தெளித்தும் பயன் இல்லாததால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

## வறட்சியால் கால்நடை வளர்ப்பில் ஆர்வம் காட்டும் விவசாயிகள்

காரைக்குடி:பருவமழை பொய்த்து விட்டதால், விவசாயிகள் கால்நடை வளர்ப்பில் ஆர்வம் செலுத்த துவங்கியுள்ளனர்.

பருவ மழையை அடிப்படையாக கொண்டு, விவசாயம் செய்யப்படுகிறது.

இந்த ஆண்டு, மிக குறைந்த அளவே மழை பெய்துள்ளது. மழையின் பாராமுகத்தால், நெற்பயிர்கள் "சாவி' யாகி வருகின்றன.

கிணற்று பாசனத்தில் தண்ணீர் பாய்ச்ச முன்வரும் விவசாயிகளுக்கு, மின்வெட்டு மிரட்டலை தருகிறது. சாவியான நெற்பயிர்களில், மாடுகளை மேயவிடுகின்றனர்.

விவசாயம் பொய்த்து விட்டதால், விவசாயிகளின் கவனம் கால்நடை வளர்ப்பிற்கு மாறியுள்ளது.

வழக்கமாக, நவம்பர், டிசம்பரில் விவசாய வேலைகள் அதிகம் இருப்பதால், விவசாயிகள் கால்நடை வளர்ப்பில் அக்கறை செலுத்துவதில்லை. இதன் காரணமாக, பால் வரத்தும் குறைவாக இருக்கும்.

இந்த ஆண்டு, விவசாயிகள் கால்நடை வளர்ப்பில் ஆர்வம் செலுத்தியதால், பால் வரத்து அதிகரித்துள்ளது.

## விவசாயிகள் பயிற்சி முகாம்

திருச்சுழி:திருச்சுழி அருகே கல்லூரணியில், வேளாண்., துறை அட்மா திட்டத்தின் கீழ், பண்ணை பள்ளிக்கான திருந்திய நெல் சாகுபடி விவசாயிகள் பயற்சி முகாம் நடந்தது.

வேளாண்., உதவி இயக்குனர் நாச்சியார் அம்மாள் திருந்திய நெல் சாகுபடியில், கோனோ கருவி கையாளுதல், நீர் மறைய நீர் கட்டுதல் தொழில் நுட்பங்களை விளக்கினார்.

இவ்வாறு செய்வதன் மூலம் விதையளவு, தண்ணீர் மற்றும் கூலி ஆட்கள் போன்றவற்றில் சேமிப்பு, அதிக மகசூல் கிடைக்கிறது. தொழில் நுட்ப வல்லுநர்கள் பாலக்கண்ணன், மாரியம்மாள் பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்தனர்.

## ஏலத்தில் தேயிலை தூளுக்கு விலை ஏற்றம்

குன்னூர் : குன்னூர் தேயிலை ஏலத்தில் தேயிலை தூளுக்கு 2 ரூபாய் ஏற்றம் இருந்தது.
குன்னூர் தேயிலை வர்த்தகர்கள் சங்கத்தின் 51வது ஏலம் மற்றும் இந்தாண்டின் கடைசி ஏலம் கடந்த 20 மற்றும் 21ம் தேதிகளில் நடந்தது. இதில், மொத்தம் 14.99 லட்சம் கிலோ தூள் விற்பனைக்கு வந்தது. இலை ரகம் 10.73 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 4.26 லட்சம் கிலோவும் அடங்கும். ஏலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் அதிகளவில் கலந்து கொண்டதால், தூள் விற்பனை களை கட்டியது. விற்பனைக்கு வந்த 93 சதவீத தேயிலை தூள் விற்பனையானது. மேலும், கிலோ ஒன்றுக்கு 2 ரூபாய் விலை அதிகரித்தது.
சாதாரண இலை ரகத்துக்கு 86-90 ரூபாய் வரையிலும், உயர் வகைக்கு 110-150 ரூபாய் வரையிலும், டஸ்ட் ரகத்தில் சாதாரண ரகத்துக்கு 86-90 ரூபாய் வரையிலும், உயர் வகைக்கு 110-150 ரூபாய் வரையிலும் விலை கிடைத்தது. அதிகபட்சமாக "சிடிசி' டஸ்ட் ரகத்தில், ஒரு கிலோ தேயிலை தூளுக்கு 180 ரூபாயும், ஆர்தோடக்ஸ் ரகத்துக்கு 260 ரூபாயும் விலை கிடைத்தது.
கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு விடுமுறைகளுக்கு பின்னர் அடுத்தாண்டுக்கான முதல் ஏலம் ஜனவரி மாதம் 3ம் தேதி நடக்கிறது.

**விதை கிராம திட்டத்தில்வேளாண் பயிற்சி முகாம்**

கரூர்: நொச்சிப்பட்டியில் விதைகிராம திட்டத்தின் கீழ், வேளாண் பயிற்சி முகாம் நடந்தது.தாந்தோணி வேளாண்மைத்துறை சார்பில், நொச்சிப்பட்டியில், வேளாண் இணை இயக்குனர் ராமலிங்கம் தலைமையில், விதைக்கிராம தி ட்டத்தின் கீழ், வேளாண் பயிற்சி முகாம் நடந்தது. தாந்தோணி ÷வளாண்மை உதவி இயக்குனர் ஷோபா வரவேற்றார். கிருஷ்ணராயபுரம் எம்.எல்.ஏ., காமராஜ் நிகழ்ச்சியில் பங்கேற்று, பயனாளிகளுக்கு, இரண்டு லட்சம் ரூபாய் மதிப்பிலான விவசாய ஈடுபொருட்களை வழங்கினார்.விழாவில், யூனியன் தலைவர் ராமலிங்கம், ஒன்றிய செயலாளர் விஜயபாஸ்கர், வேளாண் இணை இயக்குனர்கள் சவுந்தரம், சுப்பிரமணியன், பஞ்சாயத்து தலைவர் ஜெயசித்ரா, யூனியன் கவுன்சிலர்கள் மற்றும் ÷வளாண் அலுவலர்கள் பங்கேற்றனர்.

**இயற்கை முறை சாகுபடி பயிற்சி : :ஏராளமான விவசாயிகள் பங்கேற்பு**

பெரம்பலூர்: இயற்கை முறையில் மஞ்சள் சாகுபடி பயிற்சியில் ஏராளமான விவசாயிகள் பங்கேற்றனர்இந்திய அரசின் உயிர் தொழில்நுட்பவியல் துறை திட்ட உதவியுடன், பெரம்பலூர்

தனலட்சுமி சீனிவாசன் மகளிர் கலை அறிவியல் கல்லூரியின் உயிர் தொழில்நுட்பவியல் துறை சார்பில், பாப்பாங்கரை மற்றும் எசனை கிராம விவசாயிகளுக்கு இயற்கை முறையில் மஞ்சள் சாகுபடி பயிற்சி நடந்தது.பயிற்சியில் பெரம்பலூர் வேளாண் துணை இயக்குனர் சுப்ரமணியம் தலைமை வகித்து பேசியதாவது:இதுநாள் வரை அதிகளவு ரசாயன உரங்களையும், ரசாயன பூச்சிக்கொல்லிகளையும் பயன்படுத்தி நிலத்தை வீணாக்கிவிட்டோம். எனவே, மண் பரிசோதனை செய்து, இயற்கை உரங்கள், உயிர் உரங்கள் போன்றவற்றை பயன்படுத்தி, மண்ணை வளப்படுத்த வேண்டும்.மஞ்சள் சாகுபடி செய்யும் விவசாயிகள் சந்திக்கும் பிரச்னைகளில் முக்கியமானது பூச்சிநோய் மேலாண்மை மற்றும் சத்து பற்றாக்குறைதான். இவற்றை தக்க தருணத்தில் நிவர்த்தி செய்வதால், தரமான மஞ்சள் சாகுபடி பெறலாம்.இவ்வாறு அவர் பேசினார்.துணை வேளாண் அலுவலர் சுப்ரமணியன் மஞ்சள் ரகங்கள், பயிர் செய்ய ஏற்ற பருவங்கள் பற்றி விளக்கினார்.

இதில் கல்லூரியின் உயிர்தொழில்நுட்பவியல் துறை தலைவர் மற்றும் திட்ட முதன்மை ஆராய்ச்சியாளர் சசிதரா பேசியதாவது:உயிர் உரங்களான டிரைக்கோடெர்மா விரிடி, சூடோமோனாஸ் மற்றும் நுண்ணுயிர் பூச்சிக்கொல்லிகளான பேசிலோமைசிஸ், பேவேரியா போன்றவற்றின் பயன்பாடுகளை விளக்கினார். உயிர் உரங்களை பசும்சாணம் கொண்டு விதை நேர்த்தி செய்து நடுவதால், தண்டு, வேர் அழுகல் நோய்களை கட்டுப்படுத்தலாம். நுண்ணுயிர் பூச்சிக்கொல்லிகள் மூலம், சாறு உறிஞ்சும் பூச்சிகள் மற்றும் இலை உண்ணும் புழுக்களை கட்டுப்படுத்தலாம். வேம்பு மற்றும் புங்கம் போன்றவற்றிலிருந்து கிடைக்கும் தாவரப்பூச்சி விரட்டிகளையும் பயன்படுத்தலாம்.இவ்வாறு அவர் பேசினார்.கல்லூரியின் திட்ட அலுவலர் முத்துக்கிருஷ்ணன் நுண்ணுயிர் விதை நேர்த்தி செயல் விளக்கம் செய்து காட்டினார். இயற்கை வளர்ச்சி ஊக்கிகளான பஞ்சகாவியம், ஜீவாமிர்தம், அமிர்த கரைசல், தேங்காய், பால், மோர் கரைசல் தயாரிக்கும் முறை, பயன்படுத்தும் முறை பற்றி விளக்கினார். இதில் வேளாண் அலுவலர் பச்சையம்மாள், விவசாயிகளுக்கு பண்ணை கழிவுகளை மக்க வைக்கும் முறையை செய்து காட்டினார்பயிற்சியில் பங்கேற்ற அனைத்து விவசாயிகளுக்கும் மஞ்சள் சாகுபடி தொழில்நுட்ப கையேடு, ஊக்கத்தொகை மற்றும் இயற்கை உரம் வழங்கப்பட்டது.

## பட்டு வளர்ப்பு தொழில் மேம்படுத்தவிவசாயிகளுக்கு மானியம் வழங்கல்

புதுக்கோட்டை: மல்பெரி செடிகள் சாகுபடியின் மூலம், பட்டு வளர்ப்புத் தொழிலை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள், பட்டு வளர்ச்சித் துறையின் மூலம் முடுக்கிவிடப்பட்டுள்ளது.புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்போது, 409 ஏக்கரில் மட்டுமே மல்பெரி செடிகள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம், 62 ஆயிரத்து, 841 கிலோ பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதில் வெண்பட்டு கூடுகள், 16 ஆயிரத்து, 847 கிலோவாகும். இந்த ஆண்டு மேலும், 50 ஏக்கரில் மல்பெரி செடிகள் சாகுபடி செய்யவும், இதன்மூலம் பட்டுக் கூடுகளின் உற்பத்தியை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.ஆலங்குடி, வடகாடு, கீரமங்கலம், கொத்தமங்கலம், கறம்பக்குடி உள்ளிட்ட, மாவட்டத்தின் பல பகுதிகள் மல்பரி செடிகள் சாகுபடி செய்வதற்கான மண் வளத்தை கொண்டுள்ளது. அப்பகுதிகளில் மத்திய, மாநில அரசுகள் நிதி உதவியுடன் வீரிய இன மல்பரி செடிகளை அதிகளவு நடவு செய்வதற்கான நடவடிக்கைகளை பட்டு வளர்ச்சித் துறை துவக்கியுள்ளது.மல்பரி செடிகள் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு, 6,750 ரூபாய் வீதம் ஊக்கத்தொகை வழங்கப்படும். ஒரு ஏக்கருக்கு மேல் மல்பரி செடிகள் சாகுபடி செய்து, 1,500 சதுர அடிக்கு குறையாமல் பட்டுப்புழு வளர்ப்பு மனை அமைக்கும் விவசாயிகளுக்கு, மானியமாக, ஒரு லட்சம் ரூபாய் வழங்கப்படும். பட்டுப்புழு வளர்ப்பு மனை ஆயிரம் சதுர அடியாக இருந்தால், 75 ஆயிரம் ரூபாய் மானியமாக வழங்கப்படும்.இத்திட்டத்தின் கீழ் இதுவரை, எட்டு விவசாயிகள் பட்டுப்புழு வளர்ப்பு மனை அமைத்து, மானிய உதவி பெற்றுள்ளனர். மல்பரி செடிகள் சாகுபடிக்கு சொட்டுநீர் பாசனம் அமைக்க முன்வரும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு, 15 ஆயிரம் ரூபாய் வீதம், அதிகபட்சமாக இரண்டரை ஏக்கருக்கு, 37 ஆயிரத்து, 500 ரூபாய் மானியமாக வழங்கப்படும்.சிறு மற்றும் குறு விவசாயிகளாக இருந்தால் ஏக்கருக்கு, 20 ஆயிரம் ரூபாய் வீதம், 50 ஆயிரம் ரூபாய் வரை மானியமாக வழங்கப்படும். இந்த ஆண்டு, 10 ஏக்கரில் சொட்டுநீர் பாசனம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் துவக்கப்பட்டுள்ளது. இவைதவிர பட்டு வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டுவரும் விவசாயிகளுக்கு இதற்கான நவீன தளவாடங்கள் வழங்கப்படுகிறது.

## 26ம் தேதி விவசாயிகள் குறை தீர்வு கூட்டம்

காஞ்சிபுரம் : காஞ்சிபுரத்தில் நாளை மறுதினம் (26ம் தேதி), விவசாயிகள் குறை தீர்வு கூட்டம் நடைபெற உள்ளது. காஞ்சிபுரம் மாவட்ட விவசாயிகள் குறை தீர்வு கூட்டம், மாதந்தோறும் நடந்து வருகிறது. இம்மாதத்திற்கான கூட்டம், 26ம் தேதி, காலை 11:00 மணிக்கு, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் உள்ள, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்ட அரங்கில்

நடைபெற உள்ளது. கூட்டத்தில், விவசாயிகள் கலந்து கொண்டு, தங்களது குறைகள் மற்றும் கருத்துக்களை தெரிவிக்கலாம்.

**செடி - கொடிகளால் மண்டி கிடக்கும் மழைநீர் கால்வாய்**

காஞ்சிபுரம் : காஞ்சிபுரத்தில் இருந்து, திருப்பத்திகுன்றம் சாலையில் உள்ள, மழைநீர் கால்வாயை தூர்வார வேண்டும் என, அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே, திருப்பத்திகுன்றத்திற்கு செல்லும் சாலை உள்ளது. இதையொட்டி, பெரிய மழைநீர் கால்வாய் அமைந்து உள்ளது. இங்குள்ள தமிழக வீட்டுவசதி வாரிய குடியிருப்பு மற்றும் இதை சுற்றியுள்ள பகுதிகளில் பெய்யும் மழைநீர், இந்த கால்வாய் வழியாக, பாலாற்றில் சென்றடையும்.கரைகள் பலமிழந்ததால், மழை பெய்யும் சமயத்தில், கால்வாயில் செல்லும் மழைநீர், அங்குள்ள குடியிருப்பு பகுதியை சூழ்ந்து கொள்ளும். இரண்டு ஆண்டுக்கு முன், அப்போதைய செவிலிமேடு பேரூராட்சி சார்பில், கான்கிரீட்டால் கரைகள் கட்டப்பட்டது. மழைநீர் செல்லும், வகையில், "வாட்டம்' அமைக்கப்படாததால், தண்ணீர் கால்வாயிலேயே மாதக் கணக்கில் தேங்கி நிற்கும் அவல நிலை

ஏற்பட்டது. இதனால், இந்த கால்வாயில் கொசு உற்பத்தியாகி, இங்குள்ள மக்களை வாட்டி வதைக்கிறது. இக்கால்வாயில் செடி, கொடிகள் மண்டிக் கிடப்பதால், பயனற்ற நிலையில் உள்ளன. காஞ்சிபுரம் நகராட்சி சார்பில், மஞ்சள் நீர் கால்வாயில் தூர்வாரும் பணி நடந்து வருகிறது. இதேபோல் திருப்பத்திகுன்றம் சாலையில் உள்ள, மழைநீர் கால்வாயை தூர்வாரி செப்பனிட வேண்டும். தண்ணீர் தேங்காமல் செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும் என, இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

**வேளாண்மை விரிவாக்க மைய இடமாற்றத்தால் விவசாயிகள் சிரமம் : தனியாரை நாடும் நிலை**

பொன்னேரி : மீஞ்சூர் ஒன்றிய அலுவலக வளாகத்திற்கு, வேளாண்மை விரிவாக்க மையம் இட மாற்றம் செய்யப்பட்டதால், விவசாயிகள் வேளாண்மை தகவல் மற்றும் ஆலோசனைகளை பெற, தனியாரை நாடும் நிலைக்கு தள்ளப்பட்டு உள்ளனர். பொன்னேரி பகுதியை சுற்றி உள்ள, 200க்கும் மேற்பட்ட கிராமங்களில் விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. ஆண்டுக்கு சொர்ணவாரி, சம்பா என, இருமுறை நெல் பயிரிட்டு வருகின்றனர். மேலும் கரும்பு, மக்காசோளம், ஊடு பயிராக பச்சை பருப்பு ஆகியவை பயிரிடப்படுகின்றன. மாற்றம் விவசாயிகள் தங்கள் விளை நிலங்களில் உள்ள பயிர்களுக்கு ஏற்படும் பாதிப்பு குறித்து

ஆலோசனை பெறவும், வேளாண்மை தகவல்களை உடனுக்குடன் தெரிந்து கொள்வதற்கு வசதியாகவும் பொன்னேரி அடுத்த சின்னகாவணம் பகுதியில், "வேளாண்மை விரிவாக்க மையம்' இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வரை செயல்பட்டு வந்தது. வேளாண்மை விரிவாக்க அலுவலர் தலைமையில் செயல்பட்டு வந்த இந்த மையம், மீஞ்சூரில் உள்ள ஒன்றிய அலுவலக வளாகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டது. இங்கு, குறுகிய கட்டடத்தில் செயல்படுவதால், அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் உட்காருவதற்கு கூட இடம் இல்லை.மீஞ்சூரை சுற்றிலும்... இதனால், பொன்னேரியில் உள்ள வேளாண்மை விரிவாக்க மைய கட்டடம், பராமரிப்பு மற்றும் பயன்பாடின்றி புதர்மண்டி கிடப்பதுடன், விவசாயிகள் ஆலோசனை மற்றும் வேளாண்மை தகவல்களை பெறுவதில் சிரமம் ஏற்பட்டு உள்ளது. மீஞ்சூர் பகுதியை சுற்றி உள்ள அத்திப்பட்டு, நந்தியம்பாக்கம், அத்திப்பட்டு புதுநகர், காட்டுப்பள்ளி ஆகிய இடங்களில் வடசென்னை மற்றும் வல்லூர் அனல் மின்நிலையம், கடல்நீரை குடிநீராக்கும் திட்டம், கப்பல் கட்டும் தளம், எண்ணூர் துறைமுகம் உள்ளிட்ட ஏராளமான தொழில் நிறுவனங்கள் உள்ளன.

மேற்கண்ட நிறுவனங்களில் இருந்து வெளியேறும் கழிவு, நச்சு காற்று, உவர்ப்பு நீர் போன்ற காரணங்களால், மீஞ்சூரை ஒட்டி உள்ள பகுதியில் விவசாயம் பாதிப்படைந்து உள்ளது.

தற்போது சம்பா பருவத்திற்காக, ஒன்றியத்தில் உள்ள, 97 ஏரி மற்றும் ஆரணி ஆற்று நீரை பயன்படுத்தி, 26,600 ஏக்கர் பரப்பளவில் நெல் பயிரிடப் பட்டு உள்ளது. அதில், 90 சதவீத விவசாயிகள் பொன்னேரி பகுதியை ஒட்டி உள்ளனர். ஒன்றியத்தின் கடைகோடி ஊரான பூங்குளம், மாங்கோடு, கங்காணிமேடு, உமிப்பேடு உள்ளிட்ட கிராமங்களில் இருப்பவர்கள், 45 கி.மீ., தொலைவில் உள்ள மீஞ்சூருக்கு, இரண்டு பேருந்து பிடித்து செல்ல வேண்டும்.

சென்று வருவதில் உள்ள சிரமத்தை கருதி, விவசாயிகள் வேளாண்மைதுறை அலுவலர்களை நாடாமல், பொன்னேரியில் உள்ள தனியார் மருந்து விற்பனையாளர்களிடம் ஆலோசனை பெற்று செல்கின்றனர்.எதிர்பார்ப்புஇது குறித்து, சின்னகாவணம் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் கூறுகையில், "கடந்த மாதம் நெற்பயிர்களில் புகையான் பூச்சி தாக்கி, பயிர்கள் வீணாகும் நிலை ஏற்பட்டது. தனியார் மருந்து கடைகளை நாடி, அவர்கள் கொடுத்த பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்தி, பயிரை காப்பாற்றினோம்' என்றனர். மேலும், "விவசாய மானியம் பெறுவதிலும், துறை அலுவலர்களிடம் ஆலோசனை பெறுவதிலும் சிரமம் ஏற்படுகிறது. அனைத்து பகுதிகளுக்கும், பொன்னேரி மைய பகுதியாக இருப்பதுடன், எளிதில் வந்து செல்ல தேவையான போக்குவரத்து வசதியும் உள்ளது. மீண்டும் இதே இடத்தில் வேளாண்மை விரிவாக்க மையத்தினை செயல்படுத்த அரசு நடவடிக்கை வேண்டும்' என்றனர்.

இது குறித்து மீஞ்சூர் ஒன்றிய வேளாண்மை துறை அதிகாரி ரேவதி கூறுகையில்,
""பொன்னேரியில் உள்ள கட்டடம் உரம் மற்றும் வேளாண்மை உபகரணங்களை பாதுகாக்கும் இடமாக பயன்படுத்தி வருகிறோம்.

அலுவலகம் பொன்னேரிக்கு மீண்டும் இடம் மாற்றுவது தொடர்பான விவசாயிகளின் கோரிக்கை குறித்து, மாவட்ட நிர்வாகத்திற்கு தெரியபடுத்தப்படும்," என்றார்.

**விக்கிரவாண்டியில் கத்தரிக்காய் விளைச்சல் ... திடீர் விலை சரிவால் விவசாயிகள் கவலை**

விக்கிரவாண்டி:விக்கிரவாண்டி அடுத்த
ராதாபுரத்தில் கத்தரிக்காய் அமோக விளைச்சல் கண்டுள்ளது. இருந்தாலும் சரியான விலை கிடைக்காததால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

விவசாயிகள் நெல், மணிலா, கரும்பு என பருவ கால பயிர்களை சாகுபடி செய்து குறிப்பிட்ட காலத்திற்கு பிறகு, தங்கள் உழைப்பிற்கான பலனை பெற்றனர்.

தற்பொது ஆட்கள் பற்றாக்குறை ஏற்ப்பட்டிருப்பதால் தங்கள் உழைப்பிற்கு உடனடி பலன் தரும் பயிர்களை சாகுபடி செய்ய துவங்கியுள்ளனர். தினமும் அல்லது வாரம் ஒருமுறை உழைப்பிற்கான பலனை கை நிறைய பார்க்க ஆரம்பித்து விட்டனர்.

அந்த வகையில் விக்கிரவாண்டி அடுத்த ராதாபுரம் பகுதி விவசாயிகள் அன்றாடம் பொதுமக்கள் பயன்படுத்தும் கத்தரிக்காயை சாகுபடி செய்துள்ளனர்.

இதனை வாரம் ஒரு முறை அறுவடை செய்து சென்னை கோயம்பேடு மார்க்கட்டிற்கு அனுப்பி, பணம் சாம்பாதிக்கின்றனர். அதிக விளைச்சல் மற்றும் மகசூலை தரக்கூடிய ரகமாக உஜாலா ரக கத்தரிக்காயை பயிர் செய்துள்ளனர்.

இந்த ரக காய்கள் ஏக்கருக்கு வாரந்தோறும் 600 கிலோ முதல் 700 கிலோ வரை மகசூல் கிடைக்கிறது. ராதாபுரத்தை சேர்ந்த மாணிக்கம்,58, என்பவர் இரண்டு ஏக்கர் நிலத்தில் உஜாலா ரக கத்தரிக்காயை பயிரிட்டுள்ளார்.

வாரத்திற்கு ஒரு முறை 20
(70 கிலோ) மூட்டைகள் கத்தரிக்காய் அறுவடை செய்வதாக
கூறுகிறார்.

சென்னையில் ஆரம்ப காலத்தில் கிலோ 20 ரூபாய் முதல் 25 ரூபாய் வரை விற்கப்பட்ட

கத்தரிக்காய், தற்போது அதிக விளைச்சல் காரணமாக விலை வீழ்ச்சியடைந்துள்ளது.
கிலோ 8 லிருந்து 10 ரூபாய் வரை விற்பதால் சரியான லாபம் கிடைக்கவில்லை என விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். வரும் தை மாதத்தில் விலை ஏறுமுகமாக இருக்கும், அந்த நேரங்களில் அறுவடை செய்பவர்களுக்கு நல்ல பலன் கிடைக்கும் என விவசாயிகள் கூறினார்.
அமோக விளைச்சல் நேரத்தில் தங்கள் விளைபொருளுக்கு ஏற்ற விலை கிடைக்காததால் இப்பகுதி விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

**தையூரில் டிரான்ஸ்பார்மர் பழுதானதால் நெல் பயிர்கள் கருகும் பரிதாப நிலை**

செஞ்சி:தையூரில் டிரான்ஸ்பார்மர் பழுதானதால் பயிர்கள் கருகும் நிலை ஏற்பட்டுள்ளது.
செஞ்சி தாலுகா தையூர் கிராமத்தில் உள்ள டிரான்ஸ் பார்மர் கடந்த சில மாதங்களாக அடுத்தடுத்து பழுதாகியுள்ளது. இந்த டிரான்ஸ் பார்மரில் இருந்து 37 விவசாய மின் மோட்டார்களுக்கும், ஒரு தெருவிற்கும் மின் சப்ளை செல்கிறது. கடந்த 9 மாதத்தில் மூன்று முறை பழுதான இந்த டிரான்ஸ்பார்மரை விவசாயிகள் தங்கள் சொந்த செலவில் சரி செய்து வைத்தனர். தற்போது மீண்டும் டிரான்ஸ்பார் பழுதானதால் என்ன செய்வதென்று புரியாமல் விவசாயிகள் குழப்பமடைந்துள்ளனர்.
தண்ணீர் பாய்ச்சுவதற்கு வழியின்றி இப்பகுதியில் பயிரிடப்பட்டுள்ள 100 ஏக்கர் நெற்பயிர்கள் அடுத்த நில நாட்களில் காய்ந்து விடும் என விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.
இது குறித்து மொடையூரில் உள்ள மின்வாரிய அதிகாரிகளிடம் புகார் செய்தும் பிரச்னை தீரவில்லை என விவசாயிகள் கூறுகின்றனர்.
தண்ணீர் பாய்ச்ச முடியாமல் சில விவசாயிகள் பயிரில் மாட்டை விட்டு மேய்த்து விட்டனர்.
மீதம் உள்ள பயிர்களை காப்பாற்றுவதற்கு மின்துறை அதிகாரிகள் விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**தியாகதுருகத்தில் பருத்தி அறுவடை துவக்கம் கூடுதல் விலை எதிர்பார்க்கும் விவசாயிகள்**

தியாகதுருகம்,:தியாகதுருகம் பகுதியில் மானாவாரியில் சாகுபடி செய்துள்ள பருத்தி செடிகளில் இருந்து பஞ்சு அறுவடையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.
தியாகதுருகம் பகுதியில் விருகாவூர், சித்தலூர், முடியனூர், பானையங்கால், பொரசக்குறிச்சி, கண்டாச்சிமங்கலம், வரஞ்சரம், கூத்தக்குடி, நாகலூர், எஸ்.ஒகையூர் உள்ளிட்ட 15க்கும் மேற்பட்ட கிராமங்களில் மானாவாரி நிலங்களில் 5,000 ஏக்கர் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆகஸ்ட் மாதம் பெய்த மழை ஈரத்தில் விதைப்பு பணிகளை முடித்தனர். அதைத்தொடர்ந்து அவ்வப்போது பெய்த மழையின்போது களை பறித்தும் உரங்கள் போட்டும் பராமரித்தனர். இதன் காரணமாக செடிகளில் அதிக அளவு காய்கள் காய்த்து செழிப்புடன் காணப்

பட்டது.

இத்தருணத்தில் போதிய

மழையளவு கிடைக்காமல் செடிகள் வாடியது.

கடந்த 20 நாட்களுக்கு முன் லேசான மழை பெய்தது வரபிரசாதமாக அமைந்தது. தற்போது காய்கள் முற்றியதால் வெடித்து அதில் இருந்து பஞ்சு வெளிப்பட்டுள்ளது. இதை சேகரிக்கும் பணியில்

விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

பனிப்பொழிவு இருப்பதால் பஞ்சு நனைந்து சேதமடையாமல் இருக்கும் வகையில் உடனுக்குடன் பஞ்சை சேகரித்து வருகின்றனர்.

கடந்த ஆண்டு "தானே' புயல் காரணமாக பருத்தி அறுவடை தருணத்தில் செடிகள் மண்ணில் சாய்ந்து மகசூல் கடுமையாக பாதிக்கப்பட்டு நஷ்டம் ஏற்பட்டது. தற்போது ஊட்டமாக வளர்ந்துள்ள செடிகளில் மகசூல் கூடுதலாக கிடைக்கும் என்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கடந்த இரு வாரங்களாக கள்ளக்குறிச்சி பருத்தி மார்க்கெட் திறக்கப்பட்டு புதன் கிழமை தோறும் விற்பனை நடந்து வருகிறது. கடந்த வார நிலவரப்படி ஒரு குவிண்டால் பஞ்சு மூட்டை 4,209 ரூபாய் வரை விலைபோனது. மேலும் விலை அதிகரிக்கும் என்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

24.12.2012 A.M

## தண்ணீர் இன்றி 10 ஆயிரம் ஏக்கர் மக்காச்சோளம் பயிர்கள் கருகின



உடுமலை: தண்ணீர் இல்லாததால் 10 ஆயிரம் ஏக்கரில் மக்காச்சோளம் பயிர் காய்ந்து கருகியது. எனவே விவசாயிகள் அவற்றை மாடுகள் மேய விட்டுவிட்டனர்

திருப்பூர் மாவட்டம் உடுமலை, குடிமங்கலம் பகுதி கிராமங்களில் விவசாயிகள் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கரில் மக்காச்சோளம் பயிரிட்டுள்ளனர். தென்மேற்கு, வடகிழக்கு பருவமழை மற்றும் கிணற்று நீரை நம்பி கடந்த அக்டோபரில் விதைத்தனர். துவக்கத்தில் பெய்த வடகிழக்கு பருவமழை பின்னர் பொழியவில்லை.

இதைத்தொடர்ந்து கிணறு மற்றும் போர்வெல் நீரை பயன்படுத்தினர். இரண்டரை மாதம் நன்கு வளர்ந்த மக்காச்சோள பயிர்கள் இன்னும் ஒன்றரை மாதத்தில் அறுவடைக்கு தயாராகும். ஆனால் நிலத்தடி நீரும் வறண்டதால் தண்ணீர் கிடைக்கவில்லை. சில இடங்களில் குறைந்த அளவு தண்ணீர் இருந்தும் மின்வெட்டு காரணமாக பாய்ச்ச முடியவில்லை. இதனால் கடந்த சில நாட்களாக மக்காச்சோள பயிர்கள் தண்ணீர் கிடைக்காமல் சருகாகியது.இனி மழையை நம்பி பயனில்லை என்பதால், மாடுகளுக்கு தீவனமாகவாவது பயன்படட்டும் என மக்காச்சோள தோட்டங்களில் மாடுகளை மேயவிட்டுள்ளனர். பயிர்கள் கருகியதால் விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளது.பாதிக்கப்பட்ட விவசாயிகள் கூறுகையில், Ôஏக்க ருக்கு 25 ஆயிரம் செலவு செய்துள்ளோம். எல்லாம் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. காய்ந்து போனால் ஒன்றுக்கும் பயன்படாது

என்பதால் மாடுகளை மேய விட்டுள்ளோம். இந்த இழப்புக்கு அரசு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என திருப்பூர் கலெக்டரிடம் மனு கொடுத்துள்ளோம் என்றனர்.

**நடப்பாண்டில் பருத்தி உற்பத்தி 3.55 கோடி பேல் ஆக உயரும்**



மும்பை : நடப்பாண்டில்(2012,13) பருத்தி உற்பத்தி 3 கோடி 55 லட்சம் பேல் ஆக இருக்கும் என்று இந்திய பருத்தி உற்பத்தியாளர் சங்கம்(சிஏஐ) தெரிவித்துள்ளது.

மும்பையில் இந்திய பருத்தி உற்பத்தியாளர் சங்கத்தின் 90வது ஆண்டு கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு சங்கத்தின் தலைவர் திரேன் சேத் கூறியதாவது:

இந்த ஆண்டு பருத்தி உற்பத்தி அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. உற்பத்தி 3 கோடி 55 லட்சம் பேல் ஆக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதே சமயம், உள்நாட்டில் பருத்தி தேவை 2 கோடி 65 லட்சம் பேல் ஆகவே இருக்கும். எனவே, பருத்தி இருப்பு அதிகமாகவே இருக்கும்.

பருவ மழை தாமதம், சாகுபடி பரப்பு குறைந்தது ஆகிய காரணங்களால், நடப்பாண்டில் பருத்தி உற்பத்தி மிகவும் குறைந்து விடும் என்ற அச்சம் இருந்து வந்தது. ஆனால், சாகுபடி பரப்பு 3 சதவீதமே குறைந்தது. ஆந்திரா, மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் மழை தாமதமானாலும் போதிய அளவுக்கு பெய்ததால், பருத்தி உற்பத்தி பாதிக்கப்படவில்லை.

கடந்த 2001,02ம் ஆண்டில் நாட்டில் ஒரு கோடி 58 லட்சம் பேல் பருத்தி உற்பத்தியாகி இருந்தது. கடந்த 10 ஆண்டுகளில் இது அதிகரித்து தற்போது இரட்டிப்பாகியுள்ளது. கடந்த 2011,12ம் ஆண்டில் 1 கோடி 21 லட்சம் பேல் பருத்தி உற்பத்தியாகியிருந்தது. நடப்பாண்டில்தான் உற்பத்தி நன்கு அதிகரித்துள்ளது. உற்பத்தியை மேலும் அதிகரிக்க புது வகை பருத்தி ரகங்களை ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு திரேன் சேத் தெரிவித்தார்.

## பருவமழை பொய்த்ததால் விவசாயம் பாதிப்பு நஷ்டத்தால் விவசாயிகள் வேதனை

மதுராந்தகம், : பருவமழை இந்த ஆண்டு பொய்த்துவிட்டதால் ஏரி பாசனம் மூலம் பயிர் செய்த விவசாயிகள் பெரும் நஷ்டம் அடைந்துள்ளனர்.

காஞ்சிபுரம் மாவட்டம் மதுராந்தகம் பகுதியில் பொதுப்பணித்துறை பராமரிப்பில் 258 ஏரிகளும் மதுராந்தகம் ஊராட்சி ஒன்றிய கட்டுப்பாட்டில் 64, அச்சிறுப்பாக்கம் ஒன்றியத்தில் 117, லத்தூர் ஒன்றியத்தில் அடங்கிய பகுதிகளில் 99, சித்தாமூர் ஒன்றியத்தில் 68 ஏரிகள் உள்ளன. இந்த ஏரிகள் மூலம் சுமார் 10 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலம் பயன்பெற்று வருகிறது. நெல், கரும்பு, வேர்க்கடலை முக்கிய விவசாயமாகும்.

ஒருபோக பயிர் அறுவடை செய்யக்கூட அனைத்து ஏரிகளும் முழுமையாக நிரம்பி இருக்க வேண்டும். ஆனால் இந்தாண்டு பருவமழை தொடர்ச்சியாக பெய்து, ஏரிகள் நிரம்பிவிடும் என்று நம்பி விவசாயிகள், நெல், கரும்பு, வேர்க்கடலை பயிரிட்டனர். ஆனால் எதிர்பார்த்தபடி மழை இல்லை. இதனால் விவசாயிகள் அதிர்ச்சியடைந்தனர். நீர்வரத்து நன்கு உள்ள மதுராந்தகம் ஏரி உள்ளிட்ட சில ஏரிகள் மட்டுமே நிரம்பியுள்ளது. பெரும்பாலான ஏரிகளில் பாதி அளவு தண்ணீர் உள்ளது.

இனிமேல் மழை பெய்யும் வாய்ப்பு மிகக் குறைவு. இதனால் பயிர்கள் பாதிக்கப்படும் ஆபத்து உள்ளது. மழையை நம்பி வட்டிக்கு கடன் வாங்கி பயிர் செய்த விவசாயிகள் பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளனர். இதனால் லட்சக்கணக்கில் நஷ்டம் ஏற்பட்டுள்ளதால் வேதனையில் உள்ளனர்.

இன்றைய வேளாண் செய்திகள்
24.12.2012 A.M

**தமிழகத்தில் தற்கொலை செய்து கொண்ட விவசாயிகள் குடும்பத்திற்கு ரூ.5 லட்சம் வழங்க வேண்டும்**

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாட்டில் விவசாயிகள் தொடர்ந்து தற்கொலை செய்து கொள்கிறார்கள் என்கிற செய்தி வந்த வண்ணம் உள்ளது. இது எனக்கு அதிர்ச்சியும், வேதனையும் அளிக்கிறது. இது ஒரு ஆபத்தான போக்காகும். தற்கொலை என்பது எந்த பிரச்சினைக்கும் தீர்வாகாது என்பதை விவசாயிகளும் உணர்ந்து அத்தகைய முயற்சிகளை கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மனிதாபிமான அடிப்படையில் அரசு உடனடியாக தற்கொலை செய்து கொண்ட விவசாயிகள் குடும்பங்களுக்கு குறைந்தது ரூ.5 லட்சமாவது உதவித்தொகை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பயிர் காக்க முடியாவிட்டாலும் உயிர் காக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையெனில் எத்தகைய உயிர் இழப்புக்கும் அரசு தான் பொறுப்பேற்க வேண்டும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

**வாணவேடிக்கை , மேளதாளத்துடன் பிணமாக சுடுகாடு வரை ஊர்வலமாகச் சென்று தகனமேடை ஏறிய விவசாயி கருகும் பயிர்களை காப்பாற்ற மழை வேண்டி நூதன வழிபாடு**

வாண வேடிக்கை, மேளதாளத்துடன் பிணக்கோலத்தில் விவசாயி ஒருவர் சுடுகாடு வரை ஊர்வலமாக சென்று தகன மேடையில் ஏறினார். கருகும் பயிர்களை காப்பாற்ற மழை வேண்டி கிராம மக்கள் இந்த நூதன வழிபாட்டை மேற்கொண்டனர்.

கருகும் பயிர்கள்

நெல்லை, தூத்துக்குடி உள்ளிட்ட தென் மாவட்டங்களில் இந்த ஆண்டில் பருவமழை அறவே பொய்த்துப் போனது. முதலில் சில நாட்கள் மட்டும் பெய்த மழை தண்ணீரை நம்பி விவசாயிகள் நெற்பயிர் சாகுபடி செய்தனர். தற்போது ஆறு, குளங்களில் தண்ணீர் இல்லாததால் பயிர்கள் கருகும் நிலை ஏற்பட்டு இருக்கிறது. நெல்லை மாவட்டம் நாங்குநேரி தாலுகா வடக்கு விஜயநாராயணம் பகுதிகளில் கடந்த மாதம் நெற்பயிர் நடவு செய்யபட்டது. விவசாயிகள் பலர் வாழையும் பயிர் செய்து இருந்தனர்.

தண்ணீர் இல்லாதால் அங்கு பயிர்கள் கருகத் தொடங்கி விட்டன. மணிமுத்தாறு அணையில் தண்ணீர் இருப்பு குறைவாகவே இருப்பதால், அங்கிருந்தும் தண்ணீர் பெற முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. மழை பெய்தால் மட்டுமே இந்த பயிர்கள் காப்பாற்றப்படும் என்பதால் விவசாயிகள் என்னசெய்வது என்று தெரியாமல் விழிபிதுங்கி உள்ளனர்.

பிணக்கோலம் பூண்ட விவசாயி

வடக்கு விஜயநாராயணத்தைச் சேர்ந்த அங்கப்பன் (வயது 45) என்ற விவசாயி, சுமார் 5 ஏக்கரில் நெற்பயிர் நடவு செய்து இருந்தார். தண்ணீர் இல்லாததால் அவரது நெல் வயல்கள் வறண்டு தரை வெடித்துவிட்டது. மழை பெய்ய வேண்டும் என்று கருதி அங்கப்பன் ஒரு நூதன வேண்டுதலில் ஈடுபட்டார். மழைக்காக கொடும்பாவியை தயார் செய்து அதனை பாடையில் ஏற்றி சுமந்து வந்து, தகனம் செய்து வேண்டிக் கொள்வார்கள். ஆனால், விவசாயி அங்கப்பன் வினோதமான முறையில் மழை வேண்டுதலை நடத்தினார். இதற்காக நேற்று கிராம மக்களை திரட்டினார். பாடையில் கொடும்பாவியை ஏற்றுவதற்கு பதில் அவரே போய் அதில் படுத்துக் கொண்டார். பெண்கள் சிலர் ஒப்பாரி வைப்பது போன்று பாட்டுப் பாடி கதறி அழுதனர். அங்கப்பனின் நெற்றியில் சந்தனம் வைத்து ஒரு ரூபாய் நாணயம் ஒட்டப்பட்டது. மூக்கின் துவாரங்களில் பஞ்சு வைக்கப்பட்டது. தலையில் இருந்து நாடி வரை சேர்த்து துணியால் கட்டினர். கால் விரல்களையும் கட்டினர். புது வேட்டி, சட்டை அவருக்கு அணிவிக்கப்பட்டு கழுத்தில் துண்டு போடப்பட்டது. கழுத்தில் மாலையும் போடப்பட்டு இருந்தது. தலையில் தலப்பாகையும் கட்டினர்.

வாணவேடிக்கையுடன் ஊர்வலம்

வாழைகள் கட்டப்பட்ட ஒரு லோடு ஆட்டோவின் பின்புறம் இருக்கை ஒன்றைப் போட்டு, அதில் பிணக் கோலத்தில் இருந்த அங்கப்பன் ஏறி அமர்ந்தார். ஒன்றிரண்டு பேரும் அந்த ஆட்டோவில் அருகே அமர்ந்து இருந்தனர். காலை 10 மணி அளவில் அங்கிருந்து இறுதி ஊர்வலம் தொடங்கியது. அங்கப்பனின் கண்களில் கறுப்புக் கண்ணாடி அணிவிக்கப்பட்டது. தெருத்தெருவாக இந்த ஊர்வலம் நடைபெற்றது. ஏராளமானவர்கள் பின்தொடர்ந்து சென்றனர். ஆட்டோவின் முன்பாக இளைஞர்கள் ஆடிப்பாடி சென்றனர். மேளதாளத்துடன், வாண

வேடிக்கை, கரகாட்டம் நடைபெற்றது. இடையிடையே சங்கு ஊதப்பட்டது. பல்வேறு தெருக்களின் வழியாக பிற்பகலில் அந்த ஊர்வலம் சுடுகாட்டை சென்றடைந்தது. அங்கு ஏற்கனவே தகன மேடை தயாராக இருந்தது. அங்கப்பன் அந்த தகன மேடையில் ஏறி படுத்துக் கொண்டார்.

<u>இறுதிச் சடங்குகள்</u>

விஜயநாராயணத்தைச் சேர்ந்த சிதம்பரம் (35) என்பவர் இறுதிச் சடங்குகளை போன்று ஒவ்வொன்றாகச் செய்யத் தொடங்கினார். அவர் மொட்டையும் போட்டுக் கொண்டார். சிதைக்கு தீ மூட்டும் நேரத்தில் அங்கப்பன் எழுந்து கொண்டார். அவர் அணிந்து இருந்த புத்தாடை உள்ளிட்டவற்றை தகனமேடையில் வைத்து தீ வைத்தனர். ‘இனியாவது மழை பெய்ய வேண்டுமே?’ என்று வருண பகவானை நினைத்து அங்கப்பனும், ஊர் மக்களும் சுடுகாட்டில் நின்றபடி வானத்தை நோக்கி வேண்டிக் கொண்டனர். துக்கத்தை முழுமையாக கடைப்பிடிக்கும் வகையில் 16–ம் நாள் விசேஷமும் நடைபெறும் என்று ஊர் மக்கள் தெரிவித்தனர்.

பிணமாக பாடையில் ஏறி சுடுகாடு வரை சென்ற விவசாயி அங்கப்பன், இது பற்றி கூறியதாவது:–

<u>பரிதாப நிலை</u>

விவசாயிகளின் நிலைமை மிகவும் பரிதாபமாக இருக்கிறது. வயலில் நெற்பயிர் கருகிக் கொண்டிருப்பதை பார்க்கும் போது, எங்களுக்கு மிகுந்த வேதனையை தருகிறது. மழையை எதிர்பார்த்து ஏமாந்து போய்விட்டோம். மின்வெட்டு பிரச்சினையாலும் கிணற்று தண்ணீரை பயிருக்கு பாய்ச்ச முடியாத நிலையில் உள்ளோம். இதனால்தான் நாங்கள் இப்படி ஒரு நூதன வேண்டுதலை நடத்தி இருக்கிறோம். ஊர் மக்கள் திரளாக பங்கேற்றனர். இனியாவது மழை பெய்யும் என்று அனைவரும் எதிர்பார்க்கிறோம். இவ்வாறு அவர் வருத்தத்துடன் கூறினார்.

**பொங்கல் பண்டிகையை முன்னிட்டு அந்தியூர் பகுதிகளில் குண்டு வெல்லம் தயாரிப்பு பணி தீவிரம்**

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு அந்தியூரில் குண்டு வெல்லம் தயாரிப்பு பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

<u>பொங்கல் பண்டிகை</u>

பச்சரிசி, குண்டுவெல்லம் கொண்டு பொங்கல் தயாரித்து செங்கரும்பு சுவைத்து கால்நடைகளுக்கும், சூரியனுக்கும் பொங்கலை படைத்து விளையாட்டுப்போட்டிகள் நடத்தி

கொண்டாடுவதுதான் பொங்கல் பண்டிகை. பொங்கல் பண்டிகைக்கு இன்னும் சில நாட்களே உள்ள நிலையில் கிராமங்களில் பானை, பச்சரிசி, குண்டு வெல்லம் வாங்குவதற்கு பொதுமக்கள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். இதனால் கரும்பை பிழிந்து குண்டு வெல்லம் உற்பத்தி செய்வதில் தொழிலாளர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இதுகுறித்து குண்டு வெல்லம் உற்பத்தி செய்யும் பணியில் ஈடுபட்ட தொழிலாளர்கள் கூறியதாவது:–

<u>குண்டு வெல்லம்</u>

சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு உற்பத்தி செய்யும் இடத்திற்கே வந்து குண்டு வெல்லத்தை பொதுமக்கள் வாங்கிச்செல்கின்றனர். நாள் ஒன்றுக்கு நாங்கள் 2 ஆயிரம் கிலோ குண்டுவெல்லம் உற்பத்தி செய்து வருகிறோம். கிலோ ஒன்றுக்கு ரூ.30–ல் இருந்து ரூ.40 வரை விற்பனை செய்கிறோம். மேலும் சித்தோடு வெல்லமண்டிக்கும் மொத்தமாக கொண்டு சென்று விற்பனை செய்து வருகிறோம். பொங்கல் வைப்பதற்கு ஏற்ப சுவையாக இருக்கும் பொருட்டு தனியாக செய்து வருகிறோம். பள்ளியபாளையத்தில் உற்பத்தி செய்யப்படும் குண்டு வெல்லத்தை மேட்டூர், கொளத்தூர், இடைப்பாடி, கோபி, சத்தியமங்கலம் போன்ற பகுதிகளில் மொத்தமாகவும் கிலோ கணக்கிலும் பொதுமக்கள் வாங்கி செல்கின்றனர்.

<u>அதிக உற்பத்தி</u>

தமிழக, கர்நாடக எல்லைப்பகுதியான கர்காகண்டி, நல்லூர், வேளாம்பட்டி, மாதேஸ்வரன் மலைப்பகுதி, ராமபுரம், கொள்ளேகால் ஆகிய பகுதிகளில் இருந்து பொதுமக்கள் நாள்தோறும் வந்து குண்டு வெல்லத்தை வாங்கிச்செல்கின்றனர். குண்டு வெல்லம் ஒலகடம், பள்ளியபாளையம், பருவாச்சி பகுதிகளில் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது.

அந்தியூரை சுற்றியுள்ள பகுதிகள் அனைத்தும் விவசாயிகள் அதிகம் வசிக்கும் பகுதியாகும். இங்கு கால்நடை வளர்ப்பிலும், விவசாயத்திலும் அதிக அளவு கிராமமக்கள் ஈடுபட்டு வருகின்றனர். அதனால் அந்தியூரை சுற்றியுள்ள கிராமங்களில் பொங்கல் மிகவும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. கால்நடைகளுக்கு தேவையான மூக்கணாங்கயிறு, கழுத்து கயிறு என வண்ண, வண்ண கயிறுகள் தயாரிப்பில் புதுப்பாளையம் பகுதி கயிறு தயாரிக்கும் தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். அதனால் அந்தியூர் பகுதியில் பொங்கல் பண்டிகை களைகட்டியுள்ளன. இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.